Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 63 | வெள்ளிக்கிழமை | தை 16 ஆம் நாள் 29 ஜனவரி 2021 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 20 | விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

## நெல்லியடியில் கோர விபத்து: ஒருவர் சாவு

யாழ்ப்பாணம், ஜன.29
நெல்லியடி நகர் பகுதியில் நேற்று அதிகாலை நடந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். 19 >

# அரச அடக்குமுறைக்கு எதிராக கிளர்கின்றது வடக்கு, கிழக்கு!

- வடக்கு, கிழக்கு சிவில் சமூக அமைப்புக்கள் ஏற்பாடு
- 3ஆம் திகதி முதல் 6ஆம் திகதிவரை கவனவீர்ப்புகள்
- அனைவரும் திரள வேண்டும் என அறைகூவல்

யாழ்ப்பாணம், ஜனவரி 29

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்படும் அடக்குமுறைகளைக் கண்டித்து எதிர்வரும் 3ஆம் திகதி முதல் 6ஆம் திகதிவரை பெரும் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது. இந்தப் போராட்டத்தில் தமிழ் பேசும் அனைத்து மக்களும் திரண்டு, தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளை உலகுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்று வடக்கு, கிழக்கு சிவில் சமூக அமைப்புக்கள் அறைகூவல் விடுத்துள்ளன. 19 >

## கறுப்பு சுதந்திர தினம்: பெப்.2 முதல் போராட்டம்

### சுதந்திர தினத்தன்று பெரும் எதிர்ப்பு பேரணி

யாழ்ப்பாணம், ஜன. 29
இலங்கையின் சுதந்திர தினம் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள நிலையில், அந்தத் தினத்தைக் கறுப்பு தினமாகப் பிரகடனப்படுத்தி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போராட்டங்கள் நடத்தப்படவுள்ளன. வடக்கு, கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டங்கள் நடத்தப்படவுள்ளன. 19 >

## பச்லெட் அறிக்கைக்கு இலங்கை அரசு பதில்!

கொழும்பு, ஜன. 29
மனித உரிமைகள் சபையின் 46 ஆவது மாநாட்டில் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட்டால் முன்வைக்கப்படவுள்ள அறிக்கைக்கு இலங்கை அரசு பதிலளித்துள்ளது. 19 >

## அபாயகரமான பாதையில் பயணிக்கின்றது இலங்கை

### ஐ.நா. காட்டமான அறிக்கை



கொழும்பு, ஜன.29
இலங்கையில் மீண்டும் மனித உரிமை மீறல்கள் நடக்கக்கூடிய அபாய நிலைமை காணப்படுகின்றது என்று ஐ.நா. அறிக்கையிட்டுள்ளது. தற்போதைய அரசு புலன் விசாரணை மற்றும் வழக்குகளை முனைப்பான விதத்தில் தடுத்து வருவதுடன், முன்னர் இவை தொடர்பாக ஏற்பட்டிருந்த வரையறுக்கப்பட்ட முன்னேற்றங்களையும் பின்தள்ளி வருகின்றது என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பச்லெட் காட்டமான அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

விரிவான அறிக்கை 3ஆம் பக்கத்தில்

## இலங்கைக்கு வந்தது கொரோனாத் தடுப்பூசி




கொழும்பு, ஜன.29
இந்திய அரசால் வழங்கப்பட்ட முதல் தொகுதி கொரோனா தடுப்பூசிகள் நேற்று இலங்கை அரசிடம் கையளிக்கப்பட்டன. 19 >

## யாழ்ப்பாணத்தில் மேலும் சிலருக்கு இடமாற்றங்கள்?

யாழ்ப்பாணம் ஜன.29
யாழ்ப்பாண மாவட்டத்தில் பணியாற்றும் பிரதேச செயலர்கள் சிலருக்கு விரைவில் இடமாற்றங்கள் வழங்கப்படவுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
அரசியல் தரப்பின் அழுத்தத்துக்கு அடிபணிய மறுத்தமையால் அவர்களைப் பழிவாங்கும் 19 >

## பச்லெட்டின் அறிக்கைக்கு பிரிட்டன், கனடா ஆதரவு!

கொழும்பு, ஜன.29
இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வெளியிட்டிருக்கும் அறிக்கை மிக முக்கியமானது. இலங்கையில் நல்லிணக்கத்தையும், பொறுப்புக்கூறலையும் உறுதிப்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டு நாம் செயற்படுவோம் என்று பிரிட்டன் மற்றும் கனடா ஆகிய நாடுகள் தெரிவித்துள்ளன. 15 >

## மல்லிகை டொமினிக் ஜீவா நேற்றுக் காலமானார்



கொழும்பு, ஜன. 29
'மல்லிகை ஜீவா' என்று அழைக்கப்படும் மூத்த எழுத்தாளர் ஜீவா தனது 94 ஆவது வயதில் நேற்று மாலை காலமானார். 19 >

## மேல்மாகாணத்தில் இன்று தடுப்பூசி ஏற்றல் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜன.29
இந்தியாவில் இருந்து நாட்டுக்கு தடுப்பூசிகள் கொண்டு வரப்பட்டுள்ள நிலையில், தடுப்பூசிகள் 19 >

## வடக்கில் தடுப்பூசி ஏற்றல் சனிக்கிழமை ஆரம்பம்!



யாழ்ப்பாணம், ஜன.29
வடக்கில் முதற்கட்டமாக சுகாதாரப் பணியாளர்களுக்கு எதிர்வரும் சனிக்கிழமை முதல் திங்கட்கிழமைவரை தடுப்பூசிகள் ஏற்றப்படும் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். 19 >

# அனலைதீவில் கணிதபாட ஆசிரியரின்றி 3 வருடங்களாக அவதிப்படும் மாணவர்கள்

**யாழ்ப்பாணம், ஜன. 29**

**யாழ்ப்பாணம் அனலைதீவு பிரதேசத்தில் உள்ள ஒரு பாடசாலை, மூன்று வருடங்களாக கணித பாட ஆசிரியர் இன்றி இயங்கிவருகின்றது. அதனால் அந்தப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனலைதீவு பிரதேச மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.**

யாழ்ப்பாண கல்வி வலயத்தில் கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்கள் வெற்றிடங்களுக்கு மேலதிகமாக உள்ளநிலையில், அனலைதீவில் இந்த அவலநிலைமை காணப்படுகின்றது.

அனலைதீவு பிரதேசத்திலுள்ள குறித்த பாடசாலை மாணவர்களுக்கு கணித பாடம் கற்பிக்க மூன்று வருடங்களாக ஆசிரியர் இல்லாதநிலை பற்றி கல்வி அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை. அதனால் தமது பிள்ளைகளின் கல்விநிலை வீழ்ச்சி அடைந்துள்ளது என்று அங்குள்ள பெற்றோர் கூறிக்கவலை தெரிவித்தனர்.

இந்தநிலையில், அண்மையில் நடைபெற்ற ஊர்காவற்றுறை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட அனலைதீவு நலன் விரும்பிகளும் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டினர். குறித்த பாடசாலைக்கு உடனடியாக கணித பாட ஆசிரியர் ஒருவரை நியமனம் செய்யுமாறும் வலியுறுத்தினர்.

இதற்குப் பதிலளித்த தீவக வலயக் கல்விப்பணிப்பாளர், குறித்த பாடசாலைக்கு கணித பாட ஆசிரியர் ஒருவரை நியமனம் செய்ய பல வழிகளிலும் முயற்சிக்கின்றோம். சிக்கல் நிலைமையே நீடிக்கின்றது. எனினும், ஆசிரிய கலாசாலை மாணவர்களிலிருந்து ஒரு தொகுதியினரை கடல்கடந்த தீவுகளில் உள்ள வெற்றிடங்களுக்கு நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

இதுஇவ்வாறிருக், கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்ற யாழ்ப்பாணம் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கல்வி வலய ஆளணி தொடர்பிலான கேள்விக்கு பதிலளித்த யாழ்ப்பாண வலயக்கல்விப்பணிப்பாளர், யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்கள் வெற்றிடங்களுக்கு அதிகமாக, தேவைக்கு அதிகமாகவே உள்ளனர் என்று தெரிவித்திருந்தார். (த319)

# சங்கிலி அறுத்து வந்தனரென வவுனியாவில் இருவர் கைது

## நகைகள் வெள்ளவத்தையில் அடைவு

வவுனியா, ஜன. 29

வவுனியாவில் சங்கிலி அறுத்து வந்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவரை வவுனியா குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த ஒருவார காலப்பகுதியில் வவுனியா வேப்பங்குளம், சாந்த சோலை மற்றும் நம்பைக்குளம் ஆகிய பகுதிகளில் மோட்டார் சைக்கிளில் சென்ற இரண்டு பேர் வீதியில் செல்லும் பெண்கள் அணிந்திருந்த சங்கிலிகளை அறுத்துச்சென்றிருந்தனர்.

பாதிக்கப்பட்டவர்கள் இது தொடர்பாக வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸில் முறையிட்டிருந்தனர்.


அந்த முறைப்பாடுகளுக்கமைய விசாரணை மேற்கொண்ட பொலிஸார், மதவாச்சி பகுதியைச் சேர்ந்த இருவரை நேற்றுக்காலை கைதுசெய்தனர்.

அவர்களின் உடமையில் இருந்து கைக்குண்டு மற்றும் வாகன இலக்கத்தகடுகள் என்பன மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களிடம் நடத்திய முதற்கட்ட விசாரணையில் அறுக்கப்பட்ட தங்க நகைகள் கொழும்பு வெள்ளவத்தை பகுதியில் அடைவு வைக்கப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கைது நடவடிக்கை வவுனியா தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மானவடுவின் தலைமையில் குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் அழகியவண்ணவின் வழிகாட்டலில் பொலிஸ் சாயன்களான திசாநாயக்க, விக்கிரமசூரிய, குமணசேகர, சதுரங்க மற்றும் கொன்ஸ்டபிள்களான தயாஎன், ரணசிங்க, தம்மிக, சமீர, மொறவக்க, அமரசூரிய ஆகியோர்களைக் கொண்ட பொலிஸ் குழுவினரால் முன்னெடுக்கப்பட்டிருந்தது. கைதுசெய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த110)

# மாடும் 5 ஆடுகளும் ரயில் மோதிச் சாவு



கிளிநொச்சி, ஜன. 29

ரயில் பாதையைக் கடந்த 5 ஆடுகள் ரயிலில் மோதுண்டு உயிரிழந்தன.

சம்பவம், கிளிநொச்சி முகமாலை பகுதியில் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் இடம் பெற்றது.

இதற்கு முன்னர், எழுதுமட்டுவாழ் ரயில் நிலைய பகுதியில், ரயில் பாதையில் நின்ற மாடு மோதுண்டு இறந்தது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த அதிவேக ரயில் மோதியே இவை இறந்தன என்று தெரிவிக்கப்பட்டது. (த-6)

# பெருந்தொகை ஆட்லறிகள் முள்ளியவளையில் மீட்பு!



முல்லைத்தீவு, ஜன.29

முல்லைத்தீவு, முள்ளியவளையில் விடுதலைப் புலிகள் அமைப்பின் பெருமளவு வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. எனினும் அவை பயன்படுத்த முடியாத அளவு பழுதடைந்துள்ளன என்று இராணுவம் தெரிவித்துள்ளது.

முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியின் மைதானத்திலேயே இவை மீட்கப்பட்டுள்ளன. பாடசாலை மைதானத்தில் கடந்த 25ஆம் திகதி துப்புரவு நடவடிக்கைகள் மேற்கொண்டபோது, முதன்முதலாக வெடிபொருள்கள் தென்பட்டன. அதையடுத்து, நீதிமன்ற அனுமதி பெற்று அங்கு நேற்று அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இராணுவத்தினரும், பொலிஸாரும் அந்தப் பகுதியில் குவிக்கப்பட்டு, கடும் பாதுகாப்புக்கு மத்தியில் கனரக வாகனம் கொண்டு அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

அகழ்வின்போது நூற்றுக் கணக்கான ஆட்லறி எறிகணைகள் மீட்கப்பட்டுள்ளன. நேற்று 146 எறிகணைகளும், 78 தோட்டாக்களும் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

அதேநேரம், அகழ்வு தொடர்பாக செய்தி சேகரிக்க ஊடகவியலாளர்களுக்கு படையினரால் அனுமதி மறுக்கப்பட்டது என்றும் தெரியவருகின்றது. (எ26)

# மருத்துவமனை பணியாளர் உட்பட 7 பேருக்கு வடக்கில் கொரோனா

யாழ்ப்பாணம், ஜன. 29

கொரோனாத் தொற்றுக்கு உள்ளான 7 பேர் வடக்கில் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

மன்னாரில் ஐவரும் வவுனியாவில் இருவருமே அடையாளம் காணப்பட்டுள்ளனர். மன்னாரில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களில் ஒருவர் மருத்துவமனைப் பணியாளர். மற்றைய நால்வரும் தொற்றாளருடன் தொடர்பைப் பேணியவர்கள். வவுனியாவில் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட இருவரும் பொலிஸ் அலுவலர்கள் என்று பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (த-26)

# இணக்க சபைகள் நடைபெறும் இடம் மாற்றம்

வவுனியா, ஜன. 29

வவுனியா இணக்க சபையின் செயற்பாடுகள் இலங்கை திருச்சபை தமிழ்கலவன் பாடசாலையில் இடம்பெறும் என்று அதன் தலைவர் சி.வரதராசா தெரிவித்தார்.

இணக்க சபையின் செயற்பாடுகள் வழமையாக வவுனியா சைவப்பிரகாசா மகளிர் வித்தியாலத்தில் நடைபெற்று வருகின்றன. எனினும் தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் 30 மற்றும் 6 ஆம் திகதிகளின் அமர்வுகள் இலங்கை திருச்சபை தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறும் என்று தெரிவித்தார்.

குறித்த இரு அமர்வுகளின் பின்னர் வழமைபோல சைவப்பிரகாசா மகளிர் வித்தியாலத்தில் இணக்க சபை செயற்பாடுகள் நடைபெறும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (த110)

# மிச்செல் பச்லெட்டுக்கு நன்றிகூறும் சிவாஜி

யாழ்ப்பாணம், ஜன. 29

இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மானிடக் குற்றங்கள் தொடர்பில் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்று அறிக்கை வெளியிட்ட ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் மிச்சல் பச்லெட் அம்மையாருக்கு நன்றி தெரிவிக்கின்றேன் என்று வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

வடக்குக் கடற் பிரதேசங்களில் நடைபெறும் சட்டவிரோத அத்துமீறல்கள், நில அபகரிப்புக்கள் தொடர்பில் தமிழ்க்கட்சிகள் அக்கறை செலுத்தியுள்ளன. இதற்காக அமைக்கப்பட்ட குழு விரைவில்கூடி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் அவர் தெரிவித்தார். (த26,319,321)

மனித உரிமை மீறல்கள் மீண்டும் இடம்பெறக்கூடிய

# அபாயகரமான பாதையில் பயணிக்கிறது இலங்கை

## ஐ.நா. காட்டமான எச்சரிக்கை

ஜெனிவா, ஜன. 29

கடந்த கால அத்துமீறல்களை இலங்கை கவனத்திலெடுக்கத் தவறியிருக்கும் நிலை, மனித உரிமை மீறல்கள் மீண்டும் இடம்பெறக்கூடிய அபாயத்தை ஏற்படுத்தியுள்ளது என ஐ.நா எச்சரித்துள்ளது. தண்டனைகளிலிருந்து தப்பிக்கும் போக்கு ஆழமாக வேரூன்றியிருக்கும் நிலை, அரச கருமங்கள் அதிகரித்தளவில் இராணுவமயமாக்கப்பட்டு வரும் நிலை, இனத்துவ தேசியவாத கடும்போக்கு சொல்லாடல்கள் மற்றும் சிவில் சமூகத்தை அச்சுறுத்துதல் போன்ற கவலையூட்டும் போக்குகள் கடந்த காலத்தில் இடம்பெற்று வந்திருப்பதை ஐ.நா. அறிக்கை எடுத்துக்காட்டுகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் ஆணையாளர் பச்லெட்டால் சமர்பிக்கப்படவுள்ள அறிக்கையை ஐ.நா. நேற்றுமுன்தினம் உத்தியோகபூர்வமாக வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

தற்போதைய அரசு புலன்விசாரணைகள் மற்றும் வழக்குகள் என்பவற்றை முனைப்பான விதத்தில் தடுத்து வருவதுடன், முன்னர் இது தொடர்பாக ஏற்பட்டிருந்த வரையறுக்கப்பட்ட முன்னேற்றங்களையும் பின்தள்ளி வருகின்றது.

**இராணுவமயம்**

2020 ஆம் ஆண்டு தொடக்கம் முதன்மையான நிர்வாகப் பதவிகளுக்கு ஜனாதிபதி ஆகக் குறைந்தது தற்பொழுது சேவையில் இருக்கும் அல்லது முன்னைய இராணுவ மற்றும் புலனாய்வு அதிகாரிகள் 28 பேரை நியமனம் செய்துள்ளார். குறிப்பாக, போரின் இறுதி வருடங்களின்போது போர்க் குற்றங்கள் நிகழ்த்தப்பட்டுன்னன எனவும், மனித குலத்துக்கு எதிரான குற்றச் செயல்கள் நிகழ்த்தப்பட்டுள்ளன என ஐ.நா. அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்த மூத்த இராணுவ அதிகாரிகள் இவ்விதம் நியமனம் செய்யப்பட்டிருப்பது கவலைக்குரியது.

ஜனநாயக வெற்றிகளுக்கு அச்சுறுத்தல் விடுத்து, நீதித்துறை மற்றும் ஏனைய முதன்மையான நிறுவனங்கள் என்பனவற்றின் சுயாதீனத்துக்கு அச்சுறுத்தல் விடுத்து வந்திருக்கும்; இணையான இராணுவச் செயலணிகளையும், ஆணைக்குழுக்களையும் அரசு உருவாக்கி இருக்கின்றது.

சிவில் சமூக அமைப்புக்கள், மனித உரிமைகள் பாதுகாவலர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோரைக் கொண்ட தரப்புக்கள் மீதான தீவிரமான கண்காணிப்பு மற்றும் துன்புறுத்தல் என்பவற்றைக் கொண்ட ஒரு போக்கு நிலவி வருவதையும், சுயாதீனமான ஊடகங்களுக்கான வெளிச் சுருங்கி வருவதையும் அவதானிக்க முடிகின்றது.

**தமிழர்கள் மீதான பாரபட்சம்**

நாட்டின் சிறுபான்மைச் சமூகங்களுக்கு, குறிப்பாக தமிழ் மக்களுக்கு எதிரான தொடர்ச்சியான, ஆழமான பாரபட்சம் மற்றும் புறமொதுக்கல் என்பன இடம்பெற்று வந்த ஒரு பின்புலத்தில் இலங்கையின் ஆயுதப் போராட்டம் எழுச்சியடைந்தது.

ஒன்றன்பின் ஒன்றாக வந்த அரசுகளால் நியமனம் செய்யப்பட்ட பெருந்தொகையான விசாரணை ஆணைக்குழுக்கள், அத்துமீறல்கள் தொடர்பான உண்மையை நம்பகமான விதத்தில் நிரூபிப்பதற்கும், பொறுப்புக்கூறலை உத்தரவாதப்படுத்துவதற்கும் தவறியிருகின்றது.

**இலங்கை விசாரணையில் நம்பிக்கையில்லை**

முன்னைய ஆணைக்குழுக்களின் முடிவுகளை மீளாய்வு செய்வதற்கென அரசு இப்பொழுது புதிய ஆணைக்குழுவை நியமனம் செய்துள்ளது.

ஆனால், அதன் அங்கத்துவ உள்ளடக்கம் பன்முகத்தன்மை மற்றும் சுயாதீனம் என்பன இல்லாதவையாக இருந்து வருவதுடன், அதன் குறிப்பு நியதிகள் அது ஏதேனும் பயனுள்ள பெறுபேறுகளை எடுத்து வருமா என்பது குறித்த நம்பிக்கையைத் தூண்டவில்லை.

அரச உத்தியோகத்தர்கள், பாதுகாப்பு படையினர் மற்றும் ஏனையோர்; 'அரசியல் பழிவாங்கலுக்கு' உட்படுத்தப்பட்டுள்ளனர் என கூறப்படுவதனை விசாரணை செய்வதற்கென ஒரு ஜனாதிபதி ஆணைக்குழு நியமனம் செய்யப்பட்டிருப்பதுடன், அது பல உயர்மட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் ஊழல் வழக்குகள் சம்பந்தப்பட்ட பொலிஸ் விசாரணைகளையும், நீதிமன்ற நடைமுறைகளையும் உதாசீனம் செய்துள்ளது.

கடந்த காலம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கத் தவறியிருக்கும் நிலை தமக்கு நீதியும், இழப்பீடுகளும் கிடைப்பதுடன், தமது அன்புக்குரியவர்களுக்கு நேர்ந்த கதி குறித்த உண்மை தெரிய வேண்டுமென வலியுறுத்திவரும் அனைத்துச் சமூகங்களையும் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான குடும்ப உறுப்பினர்கள் மீது மோசமான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது.

**சர்வதேச பொறுப்புக்கூறல்**

தேசிய மட்டத்தில் பொறுப்புக்கூறலை எடுத்து வரும் விடயத்தை முன்னெடுப்பதில் அரசு எடுத்துக் காட்டியிருக்கும் இயலாமை மற்றும் விருப்பமின்மை என்பவற்றின் பின்னணியில், சர்வதேசக் குற்றச் செயல்கள் தொடர்பாக நீதியை உத்தரவாதப்படுத்தும் பொருட்டு சர்வதேச நடவடிக்கைகளுக்கான தருணம் தற்பொழுது வந்துள்ளது. மேலும், அரசுகள் பிராந்தியத்துக்கு வெளியிலான அல்லது உலகம் தழுவிய நியாயாதிக்கத்தின் கீழ் தமது தேசிய நீதிமன்றங்களில் இலங்கையில் அனைத்து தரப்புக்களாலும் மேற்கொள்ளபட்டிருக்கும் சர்வதேசக் குற்றச் செயல்கள் தொடர்பாக புலன் விசாரணைகளை யும், வழக்குத் தொடுப்புக்களையும் மேற்கொள்ள வேண்டும். பாரதூரமான மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் என்பவற்றை இலங்கை நிகழ்த்தியுள்ளது என நம்பகமான விதத்தில் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் நபர்களுக்கு எதிராக அவர்களுடைய சொத்துக்களை முடக்குதல் மற்றும் பிரயாணத் தடைகள் போன்ற இலக்கு வைக்கப்பட்ட தடைகளை அரசுகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள முடியும்.

ஐ.நா. அமைதி காக்கும் படைகளின் செயற்பாடுகளில் இலங்கையின் பங்களிப்புக்கள் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும். எதிர்கால பொறுப்புக்கூறல் செயன்முறைக்கான சாட்சியங்களைச் சேகரித்து வைப்பதற்கும், பாதுகாப்பதற்குமென அர்ப்பணிக்கப்பட்டிருக்கும் ஒரு பதவியை உருவாக்குவதற்குப் பேரவை ஆதரவளிக்க வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் பெச்லெட் கேட்டுக் கொண்டுள்ளார். (ஒ.இ)

---

த.வி.கூட்டணி உறுப்பினருக்கு

# அடுத்த சபை அமர்விலும் பங்குபற்றத் தடைவிதிப்பு!

அம்பாறை, ஜன.29

கல்முனை மாநகர சபையின் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் கே.செல்வராசாவை நேற்றைய சபை அமர்விலிருந்து வெளியேற்ற உத்தரவிட்ட மாநகர முதல்வர், அடுத்த சபை அமர்வில் கலந்துகொள்வதற்கும் அவருக்குத் தடை விதித்துள்ளார்.

கல்முனை மாநகர சபையின் மாதாந்த பொதுச் சபை அமர்வு மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் நடைபெற்றது.

இந்த அமர்வில் வழமையான சபை நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடப்பு ஆண்டுக்கான நிலையியல் குழுக்களுக்குரிய அங்கத்தவர்கள் தெரிவு இடம்பெற்றது.

இதன்போது ஏற்பட்ட வாய்த் தர்க்கங்களின்போது சபையில் ஒழுங்கீனமாக நடந்துகொண்டார் என்று குற்றம் சாட்டப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் கே.செல்வராசாவை சபையில் இருந்து வெளியேறுமாறு மேயர் பணித்ததுடன் அடுத்த மாநகரசபை அமர்விலும் அவர் பங்கேற்க முடியாது என்று உத்தரவிட்டுள்ளார்.

எனினும் சபையில் இருந்து வெளியேற மறுப்புத் தெரிவித்த இந்த உறுப்பினரை உடனடியாக வெளியேற்றுமாறு படைக்கலச் சேவிதருக்கு மேயர் உத்தரவிட்டார்.

இதையடுத்து எதிரணியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் படைக்கல சேவிதரால் அந்த உறுப்பினர் வெளியேற்றபடுவதை தடுக்கும் வகையில், எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ற-30)

---



# குடமுழுக்கு

கொடிகாமம்,ஜன.29



வரணி கறுக்காய் கந்தசாமி ஆலய குடமுழுக்கு நேற்று வியாழக்கிழமை காலை 8 மணியளவில் நடைபெற்றது. நிகழ்வில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன், சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய ஆசிரியர் செ.பிரதாப், தென்மராட்சி பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி மகிந்தினி விஜயகுமார் ஆகியோர் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கினர். (ஜ-159)


# தடுப்பூசியைப் பயன்படுத்த 54 வீதத்தினர் இணக்கம்

கொழும்பு, ஜன.29

கொரோனா வைரஸ் தடுப்பு மருந்தைப் பயன்படுத்துவதற்கு இலங்கையில் 54 வீதமானவர்கள் தயாராகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.




இதேவேளை நாட்டில் பெரும்பாலான மக்கள் இந்த மருந்தின் பக்கவிளைவுகள் தொடர்பில் கவலை வெளியிட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.
சுகாதார ஊக்குவிப்பு பணியகத்தின் ஆராய்ச்சி பிரிவு மேற்கொண்ட கருத்துக்கணிப்பு முடிவுகளின்படி, நாட்டில் 54 வீதமான மக்களே கொரோனா வைரஸ் தடுப்பு மருந்தைப் பெறுவதற்கு தயாராகவுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.
இதேவேளை, தடுப்புமருந்து பாவனை தொடர்பில் 38 வீதமானவர்கள் தாங்கள் உறுதியாக எதனையும் தெரிவிக்க முடியாத நிலையில் உள்ளோம் எனவும், 8 வீதமானவர்கள் தாங்கள் மருந்தைப் பயன்படுத்தப்போவதில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.
இந்நிலையில், தடுப்பு மருந்தைப் பயன்படுத்துவது குறித்து 34 வீதமான ஆண்களும் 40 வீதமான பெண்களும் நிச்சயமற்ற நிலையில் உள்ளமையும் தெரியவந்துள்ளது.
மேலும், பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த 55 வீதமானவர்கள், 50 வீதமான தமிழர்கள் மற்றும் 59 வீதமான முஸ்லிம்கள் தாங்கள் வைரஸ் தடுப்பு மருந்தைப் பயன்படுத்துவதற்கு தயாராகவுள்ளோம் எனத் தெரிவித்துள்ளனர். அத்துடன், சுகாதார பணியாளர்களில் 57 வீதமானவர்கள் தடுப்பு மருந்தைப் பயன்படுத்தத் தாம் தயார் என தெரிவித்துள்ளதுடன் 37 வீதமானவர்கள் தாங்கள் நிச்சயமற்ற நிலையில் உள்ளோம் எனவும் தெரிவித்துள்ளனர். (ந-இ)



## அரச சார்பற்ற அமைப்புகளின் கூட்டம் மன்னாரில்!

மன்னார், ஜன.29
மன்னார் மாவட்டத்தில் அரச சார்பற்ற அமைப்புக்கள் மேற்கொள்ளும் வேலைத்திட்டங்களின் அனுமதி கோரல் தொடர்பான கூட்டம் மன்னார் மாவட்டச் செயலர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் மன்னார் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. கடந்த காலங்களில் மன்னார் மாவட்டத்தில் சேவையில் ஈடுபட்டு வந்த அரசு சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளில் நிலவி வந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையிலும் , நடப்பு ஆண்டில் அவற்றை நிவர்த்தி செய்து தொடர்ந்து மேற்கொள்ளப்பட இருக்கும் வேலைத் திட்டங்களை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்லும் வகையிலும் கூட்டம் ஒழுங்குசெய்யப்பட்டது என மன்னார் மாவட்டச் செயலக திட்டமிடல் பணிப்பாளர் க.மகேந்திரன் தெரிவித்தார். (வ-60)



## 27 அடி உயரத்தில் நடராஜர் சிலை

கிளிநொச்சி ஆனையிறவு தட்டுவன் கொட்டியில் கரைச்சி பிரதேச சபையால் அமைக்கப்படவுள்ள நடராஜர் சிலைக்கான அடிக்கல் நேற்றுமுன்தினம் நடப்பட்டது.தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தலைமையில், இந்த அடிக்கல் நடப்பட்டது.
இந்தச் சிலையானது 27 அடி உயரத்தில் அமையவுள்ளதுடன், இலங்கையில் மிக உயரமான சிலையாக அமையும் எனவும் குறிப்பிடப்படுகிறது.
இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன், பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையின் தவிசாளர் சின்மயா மிசன் சுவாமிகள், கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் முதல்வர், இந்து சமய அமைப்புகளின் பிரதிநிதிகள், கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-6)

## தமிழ்க் கட்சிகளின் கூட்டால் எதையுமே சாதிக்க முடியாதாம்!

### சொல்கிறார் டக்ளஸ்

யாழ்ப்பாணம், ஜன. 29
ஒற்றுமைப்படாத தமிழ் கட்சிகளின் கூட்டால் எதையும் சாதிக்க முடியாது. தமிழ் மக்கள் தமக்கான சந்தர்ப்பங்களை சரிவரப் பயன்படுத்தி தமக்கான பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முன்வர வேண்டும் என்று கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் விடுத்துள்ளார்.
யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது தலைமை அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
தமிழ்த் தேசியக் கட்சிகள் எனச் சொல்வோர் மக்களின் பிரச்சினைகளை தீராப் பிரச்சினையாக்கி தமது அரசியல் இருப்பை தக்கவைத்துக் கொள்வதற்காக பயன்படுத்தி வருகின்றனர். தமிழ்க் கட்சிகள் ஒன்று சேர்ந்து பல பேச்சுக்களை நடத்தியுள்ளனர். அவர்களில் கஜேந்திர குமார் பொன்னம்பலத்தின் கட்சி தனியாக செயற்பட வேண்டுமென வெளியே நிற்கின்றது.
ஒரே நிலைப்பாட்டில் வர முடியாதவர்கள் எவ்வாறு தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கப் போகிறார்கள்?
தமிழ்த் தேசியம் என்கின்ற கட்சிகளுடன் சேர்ந்து பயணிப்பதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் மக்களுக்கு யதார்த்தமான அரசியலையே என்னால் முன்னெடுக்க முடியும். அதற்கு இவர்களால் ஒத்துப்போக முடியுமா என்ற கேள்வி எனக்குள் இருக்கிறது.
இலங்கை கடல் எல்லைக்குள் உயிரிழந்த இந்திய மீனவர்கள் தொடர்பில் எனது இரங்கலை தெரிவித்துக் கொள்வதோடு இவ்வாறான சம்பவங்கள் இனிமேல் இடம்பெறாமல் இருக்க இந்திய அரசு மீனவர் தொடர்பில் உரிய நடை முறைகளை பின்பற்ற வேண்டும்.
இந்திய அரசுடன் நான் நல்லிணக்கத்துடன் செயற்படுகிறேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்திய அரசுடன் அக்கறையுடன் செயற்படுவது மக்களின் பிரச்சனைகளுக்காக அல்ல. இந்தியாவிலிருக்கும் அவர்களின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கே.
தமிழ் மக்களுடைய பிரச்சினையை உண்மையில் தீர்க்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் விரும்பவேண்டுமே அல்லாமல் பத்திரிகை விளம்பரத்துக்காக பேசுகிறோம் என்று பாசாங்கு செய்ய கூடாது. - என்றார். (ஓ.20)

## வடக்கில் மீண்டும் மழைக்கு சாத்தியம்

கொழும்பு.ஜன.29
நாட்டின் சில பகுதிகளில் நேற்று வியாழக்கிழமை முதல் மழைபெய்வதற்கான சாத்தியம் மேலும் அதிகரிக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
அதன்படி வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் மாத்தளை மாவட்டத்திலும் மழை நிலைமை அதிகரிக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. (ஐ-இ)

## கொரோனா சாவு 7

கொழும்பு, ஜன. 29
இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் மேலும் 7 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன நேற்றிரவு அறிவித்துள்ளார்.
நிட்டம்புவ பகுதியைச் சேர்ந்த 73 வயதான ஆண் ஒருவர், தனது வீட்டில் நேற்று உயிரிழந்துள்ளார்.
இரத்தினபுரி - கல்லேல்ல பகுதியைச் சேர்ந்த 76 வயதான பெண் ஒருவர், இரத்தினபுரி போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்று உயிரிழந்துள்ளார்.
கொழும்பு 13 ஐச் சேர்ந்த 61 வயதான ஆண் ஒருவர், கொழும்பு தேசிய மருத்துவமனையிலிருந்து, முல்லேரியா ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில், நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.
கொழும்பு 06 ஐச் சேர்ந்த 86 வயதான ஆண் ஒருவர் இம்தேபான மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், கடந்த 26ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.
கொழும்பு 06 ஐச் சேர்ந்த 67 வயதான பெண் ஒருவர் தனியார் முருத்துவமனை ஒன்றில் கடந்த 24ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.
என்தரமுல்ல பகுதியைச் சேர்ந்த 62 வயதான ஆண் ஒருவர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், கடந்த 21ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.
கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 61 வயதான கைதி ஒருவரும் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளார்.
சிறைச்சாலை மருத்துவமனையில் கொரோனாத் தொற்றாளர் என அடையாளம் காணப்பட்டதையடுத்து, கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில், அவர் கடந்த 16ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.
இதன்படி நாட்டில் கொரோனாத் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 297 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 284 பேர் கொரோனாவின் மூன்றாவது அலையில் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த22)

## ஊறணித் தீர்த்தக்கரை அபிவிருத்திக்கு ரூ.40 மில்.

கொடிகாமம், ஜன.29
வல்வெட்டித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட ஊறணித் தீர்த்தக்கரையை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டத்துக் கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் வல்வெட்டித்துறை நகரசபைத் தவிசாளர், நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் மற்றும் அதிகாரிகள், வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினர்கள், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜி லிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். நகர அபிவிருத்தி அதிகாரசபையின் 40 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இந்த அபிவிருத்தி வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (ற-159)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மனித உரிமை வெறும் பேசுபொருள் மட்டுமா?

அடுத்து வரும் சில வாரங்கள் இலங்கை தொடர்பான அரசியலின் பிரதான பேசுபொருளாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவை அமர்வு தொடர்பான விவகாரமே இருக்கப்போகிறது.

இம்முறை அந்த அமர்வின்போது இலங்கை தொடர்பான பிரச்சினைகள் குறித்து சர்வதேச சமூகம் காட்டி வரும் அக்கறையும் வெளியிட்டு வரும் தீவிரமான கருத்துக்களும் அதிகம் எனலாம். அதைவிட இந்த நெருக்கடி நிலையைச் சமாளித்து எதிர்கொள்ள இலங்கை எடுத்து வரும் நடவடிக்கைகளும் கூட நிலைமையின் கனதியைச் சற்று அதிகப்படுத்திக் காட்டுகின்றன.

முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு கடந்த ஓராண்டுக்கும் சற்றே அதிகமான காலப்பகுதிக்குள், அதுவும் குறிப்பாக கொரோனாவுக்கு பின்னரான காலப்பகுதிக்குள் உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள பெரும் பொருளாதார நெருக்கடி நிலைமையானது சர்வதேச அரசியலின் போக்கையே மாற்றிவருகிறது. இந்த நிலைமையில் இம்முறை நடைபெறவுள்ள மனித உரிமைப் பேரவையின் அமர்வு நாடுகளின் புதிய அரசியல் சூழலுக்கேற்ப, ஆதிக்க அரசியலின் புதிய வீச்சுக்கேற்ப புதிய வடிவம் கொண்டுள்ளதாகக் தோற்றம் காட்டுகிறது.

ஆனால் இது இலங்கையைக் கிடுக்கிப்பிடிக்குள் சிக்க வைத்து அதன்மூலம் அமெரிக்கா, இந்தியா மற்றும் சீனா போன்ற இந்து சமுத்திரப் பிராந்தியம் மீதான ஆதிக்க வலுவைக் கைப்பற்ற நினைக்கும் நாடுகளும் அவற்றுக்கு அனுசரணையாகச் செயற்படும் நாடுகளும் மேற்கொள்ளும் அரசியல் வியூகமே அது என நம்பலாம்.
இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான விவகாரம் என்பது ஐ.நாவும் சரி அதனை ஆட்டிப்படைக்கும் வல்லாதிக்க நாடுகளும் சரி, நீதியாகவும் நியாயமாகவும் நிரந்தரமாகவும் தீர்க்க வேண்டுமென நினைப்பார்களேயானால், அதற்கு போருக்குப் பின்னரான ஒரு தசாப்தத்துக்கும் அதிகமான கால மனித உரிமைப் பேரவை அமர்வுகளின் போது முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளும் எடுக்கப்பட்ட தீர்மானங்களும் வழங்கப்பட்ட கால அவகாசங்களும் தேவையே இல்லாதவை என்பதை அறிவர்.


உள்ளூரில் தேர்தல் கால வேட்பாளர்கள் வழங்கும் வாக்குறுதிகள் மற்றும் உத்தரவாதங்கள் போன்ற ஒரு நடவடிக்கையையே சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் மனித உரிமைப் பேரவையில் முன்வைக்கப் போகிறார்கள். அதனைவிட வேறெதுவும் அர்த்தமுள்ளதாக வந்தால் அது ஒரு அதிசய அரசியல் நிகழ்வாகவே இருக்கும்.

அதனால்தான் அமெரிக்க மற்றும் சர்வதேச அழுத்தங்களுக்கு இலங்கை அடிபணியாது என அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல ஆணித்தரமான நம்பிக்கையோடு கூறியிருக்கிறார். இது ஒரு வகையான சவால் தனமான பேச்சாகத் தோன்றினாலும் உள்ளூர் ஆதிக்கச் சக்திகளும் சமசர முன்னெடுப்புகளை மேற்கொள்ளும் நகர்வுகளை அரசு செய்யாமல் இருக்கும் என எவரும் நம்புதல் முறையோ?

சரணாகதி அரசியல் என்பது இலங்கைக்கு சகஜமான ஒரு விடயமே என்பதை வரலாறு பல பக்கங்களில் பதிவு செய்தே உள்ளது. சமரசம் என்பது சரணாகதி அல்ல என்று அவர்கள் விளக்கம்கூடச் சொல்லலாம். ஆனால் மனித உரிமைப் பேரவை அமர்வின் முடிவில் ஐ.நா. எங்கள் மக்களுக்கு எத்தகைய நம்பிக்கையை வழங்கப் போகிறது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

அடுத்து மனித உரிமைப் பேரவையிலும் இந்த விவகாரம் மீண்டும் பேசுபொருளாக இழுபடக்கூடாது என்பதுதான் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு., அவ்வளவுதான்.

## இன்றைய கருத்தோவியம்



நன்றி - நாமல் அமரசிங்க

# இந்தியாவின் பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்பட இடமளியோம்!

## கூறுகிறார் கஜேந்திரன்

**வவுனியா, ஜன. 29**

**இந்தியாவின் தேசிய பாதுகாப்புத் தொடர்பில் நாம் அக்கறையுடன் இருக்கின்றோம். அவர்களின் தேசிய பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்படும் எந்தவொரு செயற்பாட்டுக்கும் நாம் ஆதரவு வழங்கமாட்டோம். இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்தார்.**

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்குவது தொடர்பான இலங்கை அரசின் தீர்மானம் குறித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாடு என்ன என்று கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்தியா இலங்கையினுடைய அயல்நாடாக இருக்கின்றது. எங்களைப் பொறுத்தவரை இந்தியாவின் தேசிய பாதுகாப்பு நலன்களிலே எமக்கு மிகுந்த அக்கறை இருக்கின்றது. இந்தியாவினுடைய தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துகின்ற விதமாக மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளுக்கு நாங்கள் ஒரு போதும் துணை போக மாட்டோம்.
இலங்கையின் பல பாகங்களிலே சீனாவுக்கு இடம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இந்த நிலையில் இந்தியா தனது ஆதிக்கத்தை உறுதிப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இவ்வாறான சூழலில் இலங்கை அரசு இந்தியாவுடன் ஒத்துழைத்து செயற்படுவதுதான் பொருத்தமாக இருக்கும் - என்றார். (ஒ.110)

# திடீரென தீப்பற்றி எரிந்தது வீடு பெறுமதியான பொருள்கள் சேதம்

வவுனியா,ஜன.29
வவுனியா வேப்பங்குளம் பகுதியில் உள்ள வீடொன்று தீப்பற்றி எரிந்ததில் பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் தீயில் எரிந்து நாசமாகின. இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.
வீட்டில் எவரும் இல்லாத நேரத்தில், வீட்டின் சுவாமி அறையில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. வீடு தீப்பற்றி எரிவதை அவதானித்த அயலவர்கள் வீட்டின் முன் கதவை உடைத்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.
வீட்டினுள் இருந்த குளிரூட்டி , சொகுசு கதிரைகள், உடைகள் என பல லட்சம் பெறுமதியான பொருள்கள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன. தீவிபத்துக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. விபத்து தொடர்பான விசாரணைகளை பண்டாரிக்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ-18)

# எழுமாற்றான பி.சி.ஆர்; எம்.பிக்களுக்கு அழைப்பு

கொழும்பு,ஜன.29
நாடாளுமன்றத்தில் எழுமாற்றாக முன்னெடுக்கப்படவுள்ள பி.சி.ஆர். பரிசோதனைகளில் பங்கேற்குமாறு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அனுமதியுடன் வாரத்துக்கு ஒரு முறை பரிசோதனைகள் முன்னெடுக்கப்படும் என்று நாடாளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்ணான்டோ தெரிவித்துள்ளார். (ஐ-இ)

### பல்கலை அனுமதி வெட்டுப்புள்ளி சர்ச்சை:

# அமைச்சர் உள்ளிட்ட 5 பேருக்கு நீதிமன்றம் அழைப்பாணை

கொழும்பு, ஜன. 29

**பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளி குறித்து தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு தொடர்பாக கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எஸ். பீரிஸ் உள்ளிட்ட ஐவருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.**

2019ஆம் ஆண்டில் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் குழுவொன்று குறித்த ரிட் மனுவை தாக்கல் செய்திருந்தது. குறித்த மனு சோபித ராஜகருண, தம்மிக கணேபொல ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனுவைப் பரிசீலித்த நீதியரசர்கள் மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ள கல்வி அமைச்சர், அமைச்சின் செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர், பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரை எதிர்வரும் மார்ச் 10ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு உத்தரவிட்டுள்ளனர்.

புதிய பாடத்திட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் கணிதம், உயிரியல் விஞ்ஞானம் ஆகிய துறைகளில் சித்தியடைந்த தங்களுக்கு, பரீட்சையின் பழைய மற்றும் புதிய பாடத்திட்டங்களின் கீழ் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கும் புதிய முறைமை மூலம் அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்று மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர்.

பழைய மற்றும் புதிய பாடத்திட்டங்களின்படி பல்கலைக்கழக நுழைவு வெட்டுப்புள்ளியில் கணிசமான வேறுபாடு இருக்கின்றது எனவும், இதனால் தமது உரிமை மீறப்பட்டுள்ளது எனவும் மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நிலையில், இரு தரப்பினருக்கும் சமமான அல்லது நியாயமான பல்கலைக்கழக நுழைவு வெட்டுப் புள்ளி முறையை அறிவிக்கும்படி உத்தரவு பிறப்பிக்குமாறு நீதிமன்றத்திடம் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதற்கமைய பிரதிவாதிகளை எதிர்வரும் மார்ச் 10ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

(ம-22)

## தடுப்பூசிகளை இறக்குமதி செய்ய தனியார்துறைக்கு அனுமதியில்லை

### திட்டவட்டமாக அறிவித்தது அரசு

கொழும்பு, ஜன. 29

இலங்கைக்குக் கொரோனா வைரஸ் தடுப்பூசிகளை இறக்குமதி செய்யத் தனியார் துறைக்கு அனுமதியில்லை என்று அரசு அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸுக்கு எதிரான தடுப்பூசிகளைக் கையாளும் ஜனாதிபதியின் குழு இந்தத் தகவலை நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ளது.

களஞ்சிய வசதிகள் உள்ள தனியார் துறையினர் கொரோனாத் தடுப்பூசிகளை இறக்குமதி செய்யத் தயாராகி வருகின்ற நிலையிலேயே இந்த முடிவு வெளியிடப்பட்டுள்ளது. தடுப்பூசிகளைக் கையாளும் பொறுப்பை அரசு கொண்டுள்ள நிலையில், தனியார் துறைக்குத் தடுப்பூசிகளை இறக்குமதி செய்ய அனுமதிப்பது பாதுகாப்பற்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசிகளை இறக்குமதி செய்யத் தனியார் துறையினர் அனுமதி கோரியிருந்த போதிலும், அவற்றை இறக்குமதி செய்யவோ, விற்பனை செய்யவோ முடியாதென அரசு தடை விதித்துள்ளது. (ம-22)

## வடக்கு சுகாதாரத்துறையினருக்கு 10,400 தடுப்பூசிகள் தேவை

யாழ்ப்பாணம், ஜன. 29

வடக்கு மாகாணத்தில் சுகாதாரத் துறையினருக்கு வழங்க 10 ஆயிரத்து 400 பேருக்கான கொரோனாத் தடுப்பூசி டோஸ்கள் தேவை என கோரப்பட்டுள்ளது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

முதல் கட்டமாக சுகாதாரத் துறையினருக்கு கொரோனாத் தடுப்பூசி வழங்கப்படும் என சுகாதார அமைச்சால் அறிவிக்கப்பட்டது. அவ்வாறு வடமாகாணத்தில் கொரோனாத் தடுப்பூசி வழங்கப்படவேண்டிய சுகாதாரத் துறையினரின் விவரங்களை சுகாதார அமைச்சுக் கேட்டிருந்தது. அதனடிப்படையில் மருத்துவர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட மருத்துவ சேவையாளர்கள், ஊழியர்கள் என 9 ஆயிரத்து 400 பேர் வடமாகாணத்தில் கடமையாற்றுகின்றனர். அவர்களுடன் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட மருத்துவ கல்வியாளர்கள், மருத்துவ பயிற்சியாளர்கள் என ஆயிரம் பேரையும் உள்ளடக்கி, 10 ஆயிரத்து 400 பேரின் விவரம் சுகாதார அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது' என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார். (ம-26)

## தனிமைப்படுத்தல் காலம் 10 நாள்களாக குறைப்பு

### ஆபத்து நிலை எனச் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 29

கொரோனா நோயாளிகளுக்கான மருத்துவ மேற்பார்வைக் காலத்தை 14 நாள்களில் இருந்து 10 நாள்களாகக் குறைத்து புதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

புதிய விதிமுறைகளின் படி எந்த அறிகுறிகளையும் காட்டாதவர்கள் 10 நாள்களுக்குப் பிறகு வீடு திரும்ப அனுமதிக்கப்படுவர்.

இது தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் (ஜி.எம்.ஓ.ஏ) செயலாளர் ஜயந்த பண்டார தெரிவித்ததாவது:

கொரோனா நோயாளர்களுக்கான மருத்துவ மேற்பார்வைக் காலம் 14 நாள்களில் இருந்து 10 நாள்களாகக் குறைக்கப்பட்டுள்ளது. மருத்துவமனைகள் மற்றும் தனிமைப்படுத்தல் நிலையங்களின் திறன் பற்றாக்குறையே இதற்குக் காரணம். கொரோனாத் தொற்றுக்காளானவரை குறைந்தபட்சம் 14 நாள்களுக்கு மருத்துவ மேற்பார்வையில் வைத்திருக்க வேண்டுமென உலக சுகாதார நிறுவனத்தின் அறிவுறுத்தல் இருந்தபோதிலும், இலங்கையில் சுகாதார அதிகாரிகளின் முறையான திட்டமிடல் இல்லாததால், இந்த 10 நாள் திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் வைரஸ் பரவும் அபாயம் சமூகத்தில் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது - என்றார். (ம)

## இலங்கையில் கொரோனாவுக்கு ஒரு வயது!



கொழும்பு, ஜன. 29

இலங்கையில் முதலாவது கொரோனாத் தொற்றாளர் அடையாளம் காணப்பட்டு நேற்று முன்தினத்துடன் ஒரு வருடம் பூர்த்தியாகியுள்ளது.

கடந்த வருடம் ஜனவரி 27ஆம் திகதி சீனாவின் ஹூபே மாகாணத்தைச் சேர்ந்த 44 வயதான பெண் ஒருவர் இலங்கையில் முதல் கொரோனாத் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டார். இதையடுத்து இலங்கையில் கொரோனா வேரூன்றி தற்போது ஒரு வருடம் நிறைவு பெற்றுள்ளது. (ம-க)

## மஞ்சள் மற்றும் களைநாசினியுடன் கற்பிட்டியில் மூவர் கைது

சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட உலர் மஞ்சள் மற்றும் களை நாசினியுடன் புத்தளம் கற்பிட்டி பகுதியில் வைத்து மூவர் கைதுசெய்யப்பட்டனர். கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்ட விசேட ரோந்து நடவடிக்கையின்போது கைதான மூவருடன் டிங்கி படகொன்றில் இருந்து ஆயிரத்து 340 கிலோகிராம் உலர் மஞ்சள் மற்றும் 80 கிலோகிராம் களைநாசினி என்பவையும் கைப்பற்றப்பட்டன. சம்பவம் தொடர்பில் கற்பிட்டி பகுதியை சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டனர். (ஐ-இ)

## சுங்கத் திணைக்களத்தின் தொழிற்சங்கங்கள் இராணுவத்தினருக்கு எதிராகப் போர்க்கொடி!

### கோத்தாபயவின் கருத்துக்கும் கடும் எதிர்ப்பு

கொழும்பு, ஜன. 29

இலங்கை சுங்கத் திணைக்களத்தின் கடமைகளில் இராணுவத்தினரோ அல்லது மூன்றாம் தரப்பினரோ தலையிடுவதை அனுமதிக்க மாட்டோம் என்று சுங்கத் திணைக்கள தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கை சுங்கத் திணைக்கள தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, சுங்கத் திணைக்கள தொழிற்சங்கப் பிரதிநிதிகள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

சுங்கத் திணைக்களத்தில் உள்ள ஊழல்மிக்க அதிகாரிகளை நீக்கிவிட்டு, இராணுவத்தினரைக் கொண்டேனும் கடமைகளைச் செய்யவுள்ளோம் என அண்மையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதியின் இந்தக் கருத்துக்கு சுங்கத் திணைக்களத்தின் தொழிற்சங்கங்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. சுங்கத் திணைக்கள அதிகாரிகள் ஊழல் புரிபவர்கள் என ஜனாதிபதி பொதுவாகக் கூறியமை நியாயமற்றது என்றும் சுங்கத் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இனந்தெரியாத சக்தியொன்றே சுங்கத் திணைக்களம் தொடர்பாக தவறான தகவல்களை ஜனாதிபதியிடம் கூறியுள்ளது. அதன் காரணமாக ஜனாதிபதி சுங்க அதிகாரிகளைக் கடிந்துகொள்கின்றார். 2020 ஆம் ஆண்டில் சுங்கத் திணைக்களத்துக்கு வருவாய் இலக்காக 647 பில்லியன் ரூபா தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையில், நாம் 641 பில்லியன் ரூபா அரசுக்கு வருவாய் ஈட்டிக்கொடுத்துள்ளோம் என்று அவர்கள் மேலும் கூறியுள்ளனர். (ம-22)

## 9 பேருக்கு ரூ.2,50,000 தண்டம்

சாவகச்சேரி.ஜன.29

மதுபோதையில் வாகனம் செலுத்திய ஒன்பது பேருக்குச் சாவகச்சேரி நீதிமன்றத்தில் இரண்டு லட்சத்து 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

மதுபோதையில் வாகனம் செலுத்திய எட்டுப் பேருக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதம் இரண்டு லட்சம் ரூபாவும், மது போதையில் காப்புறுதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய சாரதிக்கு 50 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது. (க-9)

## விபத்தில் இருவர் காயம்

சாவகச்சேரி, ஜன. 29

வாகன விபத்தில் சிக்குண்டு இருவர் காயமடைந்தனர். குறித்த சம்பவம் நேற்று முன்தினம் பாலாவியில் இடம்பெற்றது.

இதன்போது காயமடைந்த பாலாவி வடக்கைச் சேர்ந்த துரைசிங்கம் சோமநாதன் (வயது-45) மற்றும் அவரது மனைவி சோமநாதன் சிறிபாரதி (வயது-41) ஆகியோர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ரி5-9)

# வாகனங்களில் பயணிப்போர் சுகாதார விதிகளைப் பேணவும்

**சாவகச்சேரி, ஜன.29**

**வாகனங்களில் பயணிப்போர் மிகவும் அவதானமாக பயணிக்குமாறும், சமூக இடைவெளியைப் பேணுவதுடன், கட்டாயம் முகக்கவசம் அணிந்து பயணிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தால் ஏ-9 மற்றும் ஏ-32 வீதிகள் ஊடாக பயணிக்கும் வாகனங்களின் சாரதிகள், உதவியாளர்கள் மற்றும் நடத்துநர்களுக்கு கடந்த வாரம் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.**

இதில் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதையடுத்தே இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. கடந்த திங்கட்கிழமை எழுதுமட்டுவாழில் வைத்து மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் நால்வரும், கடந்த செவ்வாய்க்கிழமை இருவரும் கொரோனாத் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர். தொற்றாளர்கள் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர் என்று தெரிவிக்கப்படுகின்ற போதிலும் சுகாதார விதிமுறைகள் உரிய முறையில் பேணப்படாவிடின், பிரதேசத்தில் தொற்று ஏற்படும் அபாயம் காணப்படுகிறது.

தொற்றாளர்கள் தென்மராட்சி பிரதேசத்தில் நடமாடியதால் தொற்றுத் தொடர்பான அறிகுறிகள் காணப்படின் உடனடியாக தமது பிரிவு கிராம அலுவலருக்கு அறிவிக்கவேண்டும். அல்லது சாவகச்சேரி மருத்துவமனையில் பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு தென்மராட்சி பிரதேச பொது மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

# அரசின் சூழ்ச்சிக்குள் வடக்கு மக்களே சிக்காதீர்!

*யாழ்.மாநகர முன்னாள் உறுப்பினர் கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஜன.29

இலங்கை அரசின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப வடக்கில் போராட்டங்கள் நடைபெற ஆரம்பித்துள்ளன. இதை மக்கள் தவிர்க்க வேண்டும் என்று யாழ்ப்பாண மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் ச.அரவிந்தன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண ஊடக அமையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

தற்போதைய சூழலில் ஜெனிவா விவகாரம் தொடர்பில் இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில், அதனைத் திசை திருப்புவதற்காக வடபகுதி மக்களைக்கொண்டு இந்தியாவுக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுக்க அரசு முயற்சிக்கிறது. இந்த விடயங்களை தமிழ்நாட்டு மீனவர்கள் மற்றும் வடபகுதி மீனவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். அதுமட்டுமன்றி, இந்திய அரசும் இதனைப் புரிந்துகொண்டு இலங்கைத் தமிழ் மக்களுக்கு தனது ஆதரவை வெளிப்படுத்த வேண்டும். குறிப்பாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசுக்கு எதிரான செயற்பாட்டுக்கு தனது ஆதரவை வெளிப்படுத்த வேண்டும். இலங்கை அரசு இந்தியாவைப் பகைப்பதற்காக பல்வேறுவகையான எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டம் இடம்பெறவுள்ள சூழலில் வடபகுதியில் இடம்பெறும் போராட்டங்கள் யாரால் ஏற்பாடு செய்யப்படுகின்றன என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும் - என்றார். (ஐ-20)

## நோயாளர்களை பார்வையிட மீண்டும் 'பாஸ்'

சாவகச்சேரி, ஜன.29

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் நோயாளர்களைப் பார்வையிடுவதற்கு பாஸ் வழங்கும் நடைமுறை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விடுதிகளில் தங்கியுள்ள நோயாளர்களைப் பார்வையிட தினமும் பெரும் எண்ணிக்கையிலான பார்வையாளர்கள் வருகை தருகின்றனர். இதனால் விடுதிகளின் பொறுப்பதிகாரிகள் கடமையைச் சரியாகச் செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது.

இதனால் நோயாளர்கள், விடுதிகளில் தங்கி நிற்கும் வேளையில், பார்வையாளர்களுக்குப் பாஸ் வழங்கும் நடைமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

## குளவிக் கொட்டுக்கு ஒருவர் இலக்கு

சாவகச்சேரி, ஜன.29

வீதியில் பறந்து வந்த கருங்குளவிகள் மூலம் 34 வயது குடும்பஸ்தர் குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை பாலாவியில் இடம்பெற்றது.

தோட்ட வேலைகளை முடித்துக்கொண்டு வீடு திரும்பிய வேளையிலேயே குளவிகள் அவரைத் துரத்தித் தாக்கியுள்ளன.

பாலாவி வடக்கைச் சேர்ந்தவரே இவ்வாறு குளவிக் கொட்டுக்கு இலக்காகி சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ரி5-9)

## தொற்றிலிருந்து மீள விசேட வழிபாடுகள்

சுன்னாகம், ஜன. 29

உலகத்திலுள்ள அனைத்து மக்களும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மீள்வதற்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இறை ஆசி வேண்டி இன்று வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம், சுன்னாகம் கந்தரோடை ஆலடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளன. (ரி5)

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

தெல்லிப்பழை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. சண்டிலிப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் இன்று பி.ப. 2.30 மணிக்கு நடைபெறும் (சு-319)

## சி.ஐ.டியால் கைதுசெய்யப்பட்ட இருவருக்கு கொரோனா!

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த இருவர் பயங்கரவாத குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு வவுனியாவில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வந்த நிலையில், அவர்கள் இருவரும் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு மற்றும் கைவேலிப் பகுதியைச் சேர்ந்த இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டு வவுனியாவில் வைத்து பல நாள்களாக விசாரணை செய்யப்பட்டு வந்த நிலையில், கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். (ற-19)



## 'எல்லாம் கடந்து போகும்' குறும்படம் வெளியீடு!!

மன்னார், ஜன.29

மன்னார் ஊடக நண்பர்களின் ஏற்பாட்டில் ஊடகவியலாளர் எஸ்.ஜெகன் இயக்கத்தில் உருவான 'எல்லாம் கடந்து போகும்' குறும்படம் நேற்றுமுன்தினம் மாலை மன்னாரிலுள்ள ஆஹாஸ் விடுதியில் வெளியீடு செய்யப்பட்டது.

இந்தக் குறும்பட வெளியீட்டு நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டி மெல், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்துகொண்டு இந்தக் குறும்படத்தை வெளியிட்டு வைத்தனர். இதில் திணைக்கள அதிகாரிகள், சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-56)

## மணல் ஏற்றிய இருவர் கைது

கிளிநொச்சி, ஜன. 29

தருமபுரம், கல்லாற்றுப் பகுதியில் அனுமதிப்பத்திரத்துக்கு முரணான வகையில் மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் டிப்பர் வாகனங்களுடன் சாரதிகள் இருவர் கடந்த செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர். இன்று வெள்ளிக்கிழமை சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தருமபுரம் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.ஐ. சிசெர தெரிவித்தார். (ஐ-113)



இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலயத்தில் அமைக்கப்பட்ட இரண்டு இராஜ கோபுரங்களுக்கான குடமுழுக்கு நேற்று வியாழக்கிழமை காலை சிறப்பாக நடைபெற்றது. (ஐ-113)

# செத்து மடியும் கால்நடைகள்

திருக்கோவில், ஜன. 29

**அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேசத்தில் நூற்றுக் கணக்கான கால்நடைகள் செத்து மடிந்துள்ளன. மேய்ச்சல் தரவை இல்லாமையாலும், நோய்த் தொற்றாலும் அவை செத்து மடிந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.**

இந்த விவகாரம் தொடர்பில் ஆராய்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசன், திருக்கோவில் பிரதேசத்தில் றூபஸ் குளப்பகுதிக்கு நேற்றுச் சென்றார்.

'திருக்கோவில் பிரதேச மேய்ச்சல் தரை விடயம் தொடர்பாக அமைச்சர் சீ.பி.ரத்நாயக்காவுடன் கலந்துரையாடப்பட்டது. விரைவில் தீர்வைப் பெற்றுத்தருவதாகக் கூறினார்.

கால்நடை வளர்ப்பைத் தமது வாழ்வாதாரமாகக் கொண்ட மக்கள் இந்த இழப்பால் துவண்டுள்ளனர். வட்டமடு மேய்ச்சல் தரவை விவகாரம் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளது.

மேய்ச்சல் தரவை இல்லாமையால், 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கால்நடைகளை குறுகிய நிலப்பரப்பில் அடைத்து வைத்துள்ளனர்.

அதனால் அவை இலகுவில் நோய்த் தொற்றுக்குள்ளாகி உயிரிழக்கின்றன. இது தொடர்பில் கால்நடை மருத்துவருடன் கலந்துரையாடி தீர்வு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்' என்றார் கலையரசன். (ஒ.இ)

## முன்னாள் போராளி ஒருவருக்கு புலம்பெயர் உறவால் நிதியுதவி

முல்லைத்தீவு, ஜன.29

முல்லைத்தீவு - கணுக்கேணி கிழக்கைச் சேர்ந்தவரும் ஒரு காலை இழந்த முன்னாள் போராளியுமான கனகராசா விஜயகுமார் என்பவரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக புலம்பெயர் உறவு ஒருவரால் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்த முன்னாள் போராளி தனது வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவி புரியுமாறு சமூக வலைத்தளங்களில் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் நிலாவரையைச் சேர்ந்த சுவிஸ்நாட்டில் புலம்பெயர்ந்து வாழும் புலம்பெயர் உறவு ஒருவரால் இந்த முன்னாள் போராளியின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக 35 ஆயிரம் ரூபா நிதி உதவி வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-246)

## பொருண்மியத்தை மேம்படுத்த கிளி. மக்களுக்கு விழிப்புணர்வு



கிளிநொச்சி, ஜன.29

கிளிநொச்சி மாவட்ட மக்களின் பொருண்மியத்தை மேம்படுத்துவதற்கான வழிவகைகள் குறித்து மக்களுக்கு தெளிவூட்டும் செயற்பாடுகளை கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு முன்னெடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிராம ரீதியாக மனைப்பொருளாதாரத்தை மேம்படுத்தும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் சுபீட்சத்தின் நோக்கு செயற்றிட்டத்தில் நேரடியாக பங்கேற்றுவரும் ஒருங்கிணைப்புக்குழு இணைப்பாளர்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் பழமரக்கன்று விநியோகத்துடன், அவற்றை உரிய முறையில் நட்டுப் பராமரித்து சுயதேவைகளையும் பூர்த்திசெய்து வருமானமீட்டக்கூடிய வழிவகைகள் குறித்து மக்களுக்கு வழிகாட்டி வருகின்றனர்.

வெறுமனே உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதுடன் நின்றுவிடாமல், பெறுமதிசேர் உற்பத்திகள் மூலம் கூடுதல் இலாபமீட்டக்கூடிய வகையில் கைத்தொழில் துறைகளை மேம்படுத்துவது தொடர்பாகவும், உள்ளூர் உற்பத்திகளுக்கான தேசிய மற்றும் வெளிநாட்டுச் சந்தை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளும் வழிமுறைகள் குறித்தும் இந்தச் சந்திப்புக்களில் மக்களுக்கு அவர்கள் தெளிவூட்டி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-ரி2)

## யானை உயிரிழப்பு: மருத்துவக் குழு ஆய்வு!

முல்லைத்தீவு, ஜன.29

முல்லைத்தீவு - முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட களிக்காடு எனப்படும் அரச காட்டுப்பகுதியில் காட்டு யானை ஒன்று உயிரிழந்துள்ளது.

இது தொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் மருத்துவக் குழுவினர் அங்கு சென்று ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த யானை உயிரிழந்து சுமார் 15 நாள்களைக் கடந்த நிலையில், காட்டுப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதையடுத்தே யானையின் உடலம் கண்டெடுக்கப்பட்டது. யானையின் தலையில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்த அடையாளம் காணப்படுவதுடன், யானையின் தந்தமும் வெட்டி எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடயங்கள் காணப்படுவதை அடுத்து, யானையின் உயிரிழப்புக் குறித்து வனஜீவராசிகள் திணைக்களத்தினர் மற்றும் முள்ளியவளைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். இது சட்டவிரோத துப்பாக்கிதாரிகளின் செயற்பாடாக இருக்கலாம் என்ற கோணத்திலும் விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன. (ற-19)

## தனது அக்கறையை மீண்டும் இந்தியா வெளிப்படுத்தியுள்ளது

### இலவச தடுப்பூசி தொடர்பில் இந்துமாமன்றம் நன்றி தெரிவிப்பு

கொழும்பு, ஜன.29

இந்தியா அன்பளிப்பாக வழங்கும் கொரோனா தடுப்பூசிக்கு இலங்கை மக்கள் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். இவ்வாறு அகில இலங்கை இந்துமாமன்றப் பொதுச் செயலாளர் வே.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

இந்துமா மன்றத்தின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த பல மாதங்களாக, இலங்கை உள்பட உலகமே கொரோனாத் தொற்றின் பிடியில் சிக்கி அதிலிருந்து மீளெழுவதற்கான சகல முயற்சிகளையும் செய்து வருகின்றது. இந்நிலையில், நமது அயல் நாடான இந்தியாவின் தடுப்பு மருந்துகள் இலங்கை மக்களுக்கு இலவசமாக வழங்கப்படவுள்ளன. இலங்கைக்கு வரலாற்று ரீதியாக நெருங்கிய உறவான நாடு என்ற வகையில் இந்தியா பல மனிதாபிமான உதவிகளை பல தடவைகள் ஆற்றியிருக்கின்றது. தற்போது தடுப்பு மருந்துகளை முதற்கட்டமாக இலங்கைக்கு இலவசமாக வழங்கி, இலங்கை மக்கள் மீதான தனது அக்கறையை இந்தியா மீண்டும் தெரியப்படுத்தியுள்ளது. இப்பெரும் உதவிக்கு இந்திய அரசாங்கத்துக்கும், தடுப்பு மருந்தைக் கண்டுபிடிப்பதில் ஈடுபட்ட விஞ்ஞானிகள் மற்றும் மருத்துவர்கள் அனைவருக்கும் இலங்கை மக்கள் சார்பில் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என்றுள்ளது. (ந)

# நல்லிணக்கத்தை ஏற்படுத்த முயல்வேன்

### யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜன.29**
**மதத் தலைவர்களின் ஆசியோடு யாழில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுப்பேன் என யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா தெரிவித்தார்.**

சாவகச்சேரியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்தையும், இங்குள்ள மக்களையும் நன்கு அறிந்தவன் நான். எனவே இங்குள்ள மதத் தலைவர்கள் ஊடாக ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதுடன், மாவட்டத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி தேசிய பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்படாத வகையில் யாழ் மாவட்டத்தில் உள்ள மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு என்னாலான பூரண ஒத்துழைப்பை வழங்குவேன்.

அத்தோடு எனக்குக் கீழ் பணியாற்றும் சகல ராணுவ வீரர்களும் பொதுமக்களின் சகல சமூக செயற்பாடுகளுக்கும் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (வ-26)

## மானிப்பாயில் கைதான 4 பேருக்கும் மறியல்

யாழ்ப்பாணம், ஜன. 29
மானிப்பாய் பொலிஸ் பிரிவில் கலாசார சீரழிவில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 2 பெண்கள் உள்ளிட்ட நால்வரையும் எதிர்வரும் 8ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது. அத்துடன், 20 வயது பெண்ணை சட்ட மருத்துவ அதிகாரியிடம் முற்படுத்தி மருத்துவ பரிசோதனை அறிக்கையைப் பெற்று மன்றில் சமர்ப்பிக்குமாறு நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராசா பொலி ஸாருக்கு உத்தரவிட்டார்.

முச்சக்கர வண்டியில் நடமாடும் கலாசார சீரழிவில் ஈடுபட்டு வந்த குற்றச்சாட்டில் பெண்கள் இருவர் உட்பட நால்வர் மானிப்பாய் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ.26)

## மாநாட்டில் பங்கேற்றோருக்கு பி.சி.ஆர். சோதனை

பேசாலை, ஜன. 29
பேசாலையிலுள்ள ஆலயமொன்றில் இடம்பெற்ற மாநாட்டில் கலந்து கொண்டவர்களில் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அந்த மாநாட்டில் கலந்து கொண்டவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டன.

கடந்த சில தினங்களுக்கு முன் பேசாலை பகுதியிலுள்ள ஆலயமொன்றில் இவ் வருடத்துக்கான திட்ட மாநாடு இடம் பெற்றது.

இவ் மாநாட்டில் 120 பேர் கலந்து கொண்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. பங்கேற்றவர்களில் ஒருவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், மாநாட்டில் கலந்து கொண் டவர்கள் அனைவரையும் சுகாதார சேவைகள் திணைக்கள அதிகாரிகள் சுய தனிமையில் இருக்கும் படி அறிவுறுத்தியிருந்தனர். அதற்கு அமைவாக அவர்களுக்கு பி.சி.ஆர். சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஒ.60)

# அனலைதீவு மற்றும் எழுவைதீவுக்கு அம்புலன்ஸ் படகுச் சேவை வேண்டும்

### ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை

ஊர்காவற்றுறை,ஜன.29
அனலைதீவு மற்றும் எழுவைதீவு பிரதேசங்களுக்கான அம்புலன்ஸ் படகுச் சேவையை ஏற்படுத்தி தரவேண்டும் என்று ஊர்காவற்றுறை ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. ஊர்காவற்றுறை பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. இதன்போது சுகாதார நிலைமைகள் தொடர்பில் ஆராயப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த எழுவைதீவு கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதி,'ஒரு அவசர நிலைமையின்போது நோயாளர்களை கொண்டு செல்ல வென எமது தீவுகளில் அம்புலன்ஸ் படகுசேவை ஒன்று இல்லை. தற்சமயம் நாம் கடற்படையின் உதவியுடனேயே ஊர்காவற்றுறை மருத்துவமனைக்கு நோயாளர்களை அழைத்துச் செல்கின்றோம். என்றார். இதற்கு பதிலளித்த ஒருங்கிணைப்பு இணைத்தலைவர் "இது தொடர்பில் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவுக்கும், சுகாதார அமைச்சுக்கும் கோரிக்கை முன்வைக்கின்றேன் எனத் தெரிவித்தார். இதேநேரம் இங்கு கருத்துத் தெரிவித்த ஊர்காவற்றுறை சுகாதார மருத்துவ அதிகாரி நந்தகுமார், "எழுவைதீவு பிரதேசத்தில் நோயாளிகளை துறைமுகத்துக்கு கொண்டு வரக் கூட ஒரு முச்சக்கர வண்டி வசதி இல்லை. இதனால் கர்ப்பிணிப் பெண்களை கடற்படையின் மோட்டார் சைக்கிள்களிலேயே துறைமுகங்களுக்கு அழைத்து வருகின்றோம். இது தொடர்பில் உடனடியாக தீர்வைப் பெற்றுத்தர வேண்டும்"எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதற்கு பதிலளித்த இணைத்தலைவர், உடனடியாக ஒரு முச்சக்கர வண்டியை பெற்றுத்தர ஆவன செய்கின்றேன் என உறுதியளித்தார். (ஐ-319)

# பொருள்கள் கொண்டு செல்ல பாதைச் சேவையை ஏற்படுத்தவும்

### அனலைதீவு,எழுவைதீவு மக்கள் கோரிக்கை

ஊர்காவற்றுறை,ஜன.29
அனலைதீவு மற்றும் எழுவைதீவு பிரதேசங்களுக்கு பொருள்களை எடுத்துச் செல்ல பாதை சேவை யொன்று ஏற்படுத்தி தரவேண்டும் என்று ஊர்காவற்றுறை ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் பொது மக்களால் கோரிக்கை முன்வைக்கப் பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. இதன் போதே பிரதேச மக்களால் குறித்த கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;
வீடு கட்டுமானம், அபிவிருத்தி திட்டங்களுக்கான பொருள்கள் எடுத்துச் செல்ல குறித்த கட்டுமானத்தை விட இரும்டங்கு அதிக நிதி தேவைப்படுகிறது.

இதனால் நாம் கட்டுமானப் பணிகளை நிறைவுசெய்வதற்கு கடன் பெற வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. என்றனர். இது தொடர்பில் கருத்து தெரிவித்த இணைத்தலைவர், இந்த பாதைச் சேவை தொடர்பில் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவில் கலந்தாலோசிக்கப்பட்ட, சம்பந்தப்பட்ட அமைச் சுக்கு இது தொடர்பில் பரிந்துரைக்கப்படும் எனவும் தெரிவித்தார். (ஐ-319)



பளை இந்திராபுரம் கிராமத்தில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட நிறுவனத்தால் நிர்மாணிக்கப்பட்ட பொது நோக்கு மண்டபம் தைப்பூச தினமான நேற்று பொதுமக்கள் பாவனைக்கு வழங்கப்பட்டது. (வ-9)

# உலக நாடுகள் கொரோனா ஒழிப்பில் இலங்கை அரசு தமிழர் அழிப்பில்

### எம்.பி கலையரசன் கொந்தளிப்பு

யாழ்ப்பாணம், ஜன.29
தற்போது இலங்கையில் தமிழர் மாத்திரமல்ல தமிழர்களின் கால்நடைகள் கூட வாழமுடியாத சூழ்நிலையே ஏற்பட்டுள்ளது என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தவராஜா கலையரசன் தெரிவித்தார் திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:



உலகநாடுகள் அனைத்தும் கொரோனா நோயை ஒழிக்க உழைத்து கொண்டிருக்கின்றன. ஆனால் இலங்கை அரசு வடகிழக்கு பிரதேசங்களில் எவ்வாறு தமிழர்களை அடக்க முடியும், தமிழர்களுடைய நிலங்களை எவ்வாறு ஆக்கிரமிக்க முடியும் என்ற வகையில் செயற்படுகின்றது.

அதிலும் கிழக்கில் பலமுனை முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றால் நாட்டில் ஆரோக்கியமான சூழல் உருவாகாது. இவை நிறுத்தப்பட வேண்டும். மயிலத்தமடு மேய்ச்சல் தரையில் மேய்ச்சலுக்காக விடப்பட்ட கால்நடைகள் கூட ஈவிரக்கமற்ற முறையில் அண்மைக் காலமாக கொல்லப்படுகின்றன. தற்போது அரசியல் ரீதியாக பின்னடைவைச் சந்தித்து வரும் இந்த அரசு இவ்வாறான விடயங்களை நிறுத்தி சமத்துவமான முறையில் மக்களை ஒன்றிக்கும் பணி களை முன்னெடுக்கவேண்டும் என்றார். (வ-150)

# பஸ் சேவை இன்மையால் மாணவர்கள் பாதிப்பு

கிளிநொச்சி, ஜன.29

**கிளிநொச்சி - பூநகரி அரசபுரத்துக்கான இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் சேவை நடைபெறாமையால் முக்கொம்பன் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் 60 மாணவர்கள் வரை போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.**



கிளிநொச்சி நகரத்தில் இருந்து காலை 6.30 மணிக்கு சேவையைத் தொடங்கும் போக்குவரத்து சபையின் பஸ், பூநகரி வாடியடி, அரசபுரம், செக்காலை வழியாக முக்கொம்பன் மகா வித்தியாலயத்தைசென்றடைந்துவந்தது. ஆனால் அரசபுரம், செக்காலை வீதி சேதடைந்துள்ளது எனக் கூறி கடந்த ஒரு மாத காலமாக இந்த பஸ் சேவை நடைபெறுவதில்லை. இதனால் அரசபுரம் கிராமத்தைச் சேர்ந்த 60 மாணவர்கள் வரை பாடசாலைக்கு சமூகமளிப்பதில் போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். இதன் காரணமாக பல மாணவர்கள் பாடசாலைக்கு சமுகமளிப்பதில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த பாடசாலை அதிபர் சு.பிரபாகரன், இந்த விடயம் தொடர்பில் வலயக் கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சி இலங்கை போக்குவரத்து சபையின் முகாமையாளர் ஆகியோருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. மாணவர்களின் நலன்கருதி அரசபுரத்துக்கான பஸ் சேவையை முன்னெடுக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (வ-ரி2)

## நாடு திரும்பிய ஐவருக்கு தொற்று!

முல்லைத்தீவு, ஜன.29

புதுக்குடியிருப்பு திம்பிலி தனிமைப்படுத்தல் நிலையத்தில், டுபாயில் இருந்து வந்து தனிமைப்படுத்தப்பட்டிருந்த 5 பேருக்கு கொரோனாத் தொற்று நேற்றுமுன்தினம் உறுதி செய்யப்பட்டது.

கடந்த 10 நாள்களுக்கு மேல் டுபாய் உள்ளிட்ட வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வருகைதந்த 189 பேர் திம்பிலி தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டவர்களில் 5 பேருக்கே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ற-19)

## ஈழ அகதி உயிரிழப்பு

தமிழகத்தின் திருவண்ணாமலை மாவட்டம், கலசபாக்கம் அருகே உள்ள தென்பள்ளிப்பட்டு இலங்கை அகதிகள் முகாமைச் சேர்ந்த தமிழ்ப் பெண்ணொருவர் தவறான முடிவு எடுத்து உயிரிழந்துள்ளார்.

34 வயதான, 3 குழந்தைகளின் தாய் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கணவன் மனைவிக்கு இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக அவர் தவறான முடிவு எடுத்து உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் குறிப்பிடுகின்றனர். (ஒ.இ)

## போயா விடுமுறையில் எழுமாற்று சோதனை

கொழும்பு, ஜன.29

போயா விடுமுறை தினத்தில் மேல் மாகாணத்தை விட்டு வெளியேறுவோருக்கு எழுமாறாக பரிசோதனை முன்னெடுக்கப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். இந்த நடவடிக்கை நேற்று ஆரம்பிக்கப்பட்ட பெப்ரவரி மாதம் முதலாம் திகதி வரை முன்னெடுக்கப்படும். நேற்று போயா விடுமுறை என்பதால், அதிகமானோர் மேல் மாகாணத்தை விட்டு வெளியேற சாத்தியம் இருந்ததைக் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (வ-இ)



## அதிபருக்கு மணிவிழா

கிளிநொச்சி, ஜன.29

கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலய அதிபர் க.மதுரநாயகத்தின் மணிவிழா நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போது, போர் நெருக்கடியான காலங்களில் அவர் ஆற்றிய அர்ப்பணிப்பான சேவைக்கு வடமாகாண சபை முன்னாள் உறுப்பினரும், கிளிநொச்சி கல்வி வலயத்தின் முன்னாள் பணிப்பாளருமாகிய ப.அரியரட்ணம் பாராட்டுத் தெரிவித்தார். அக்கராயன் மகா வித்தியாலய அதிபராக 2012ஆம் ஆண்டு பணிகளை பொறுப்பேற்ற இவர், உயர்தரத்தில் கணித, விஞ்ஞானப் பிரிவுகளை அங்கு ஆரம்பித்து மருத்துவப் பீடம், பொறியியற்பீடத்துக்கு மாணவர்கள் தெரிவானமைக்கு முக்கிய காரணமாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-ரி2)

## பதவியை ஏற்க மறுத்தார் அர்ஜுன ரணதுங்க

கொழும்பு,ஜன.29

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த துணைத் தலைவர் பதவியை ஏற்க மறுத்துள்ளார்.

நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான முன்மொழிவை உருவாக்க ஐ.தே. கட்சி தவறிவிட்டது என்று குறிப்பிட்டு அர்ஜுன ரணதுங்க கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அத்தக் கடிதத்தில் "ஐக்கிய தேசிய கட்சியின் மூத்த துணைத் தலைவராக என்னை நியமித்துள்ளமை தொடர்பில் தகவல் கிடைத்துள்ளது. இருப்பினும் இந்தப் பதவியை நான் ஏற்க விரும்பவில்லை" என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ-இ)

## இரண்டு கிலோ கஞ்சாவுடன் மூவர் சந்தேகத்தில் கைது

யாழ்ப்பாணம் ஜன. 29

யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியில் வைத்து 2 கிலோ கஞ்சா பொலிஸாரால் நேற்றுக் கைப்பற்றப்பட்டுள்ளது. அதனை உடைமையில் வைத்திருந்த சந்தேகத்தில் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து முச்சக்கர வண்டியும் மீட்கப்பட்டுள்ளது. வட்டுக்கோட்டை மற்றும் திவிலிப்பிட்டிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே கைதாகியுள்ளனர். (ஒ,இ)



## வகுப்பறைக் கட்டடங்கள் ஆளுநரால் திறந்து வைப்பு

கிளிநொச்சி, ஜன. 29

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பாடசாலைகளின் வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் ஆய்வு கூடம் என்பவை வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ்ஸால் கடந்த செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி ஆரம்ப வித்தியாலயத்தில் 2019ஆம் ஆண்டு மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடி வகுப்பறைத் தொகுதி, கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் தேசிய நல்லிணக்கத்துக்கும் ஒருமைப்பாட்டுக்குமான அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் உயர்தர மாணவர்களுக்குரிய விஞ்ஞான [illegible] முறை கட்டடம, கிளாலி ஆர்.ரி.எம்.எஸ். பாடசாலையின் வகுப்பறைக் கட்டடங்கள் என்பவற்றை ஆளுநர் திறந்து வைத்தார். (ஒ.6)

## வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல் மக்கள் பார்வைக்கு

யாழ்ப்பாணம்,ஜன.28

யாழ்.மாவட்ட மோட்டார் வாகன் போக்குவரத்து திணைக்களத்துக்கு கடந்த 21 ஆம் திகதி கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல் மக்கள் பார்வைக்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும், மாவட்டச் செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திலும் பொதுமக்களின் பார்வைக்காக அறிவிப்புப் பலகையில் பட்டியல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

மாவட்டச் செயலக இணை[illegible] [illegible]த்திலும் பட்டியலைப் பார்வையிடலாம்.

இதற்கமைய புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப் பதிவுப் புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும் மாகாணங்களுக்கிடையே வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத்தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் என்பவற்றையும் யாழ்.மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்தில் சமர்ப்பித்து,தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத் [illegible] பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## இன்றைய நாள்

**மேடம்:** நண்பர்களுடனான சண்டைகள், வாக்குவாதத்தை முடியுங்கள். தடைப்பட்ட சுப நிகழ்ச்சி நடப்பதற்கான முயற்சிகள் வெல்லும். செலவு செய்வதற்கு ஏற்ற வருமானத்தைப் பெறுவீர்கள்.

**இடபம்:** சிறுவெற்றி காரணமாக மகிழ்ச்சியான மன நிலை உருவாகும். பிள்ளைகள் மகிழ்ச்சி தரும்படியான செயல்களை செய்வார்கள். தயக்கத்துக்குப் பிறகு களத்தில் இறங்குவீர்கள்.

**மிதுனம்:** நீங்கள் சொல்லும் வாதங்கள் சரியாக ஏற்கப்படும். நல்ல நிகழ்வு நடப்பதால் மகிழ்ச்சியான மனநிலை நிலவும். விலை உயர்ந்த பொருள்களின் மீது கவனம் தேவை.

**கடகம்:** தைரியமும், உறுதியும் உங்களது வளர்ச்சிக்கு வழி காட்டும். வாகனம் ஓட்டும்போது எச்சரிக்கை தேவை. வீண் பகை வேண்டாம். ஒற்றுமையைக் குறைக்கும் எந்தச் செயலும் வேண்டாம்.

**சிம்மம்:** மனதில் இத்தனை நாள் நிலவிய குழப்பம் நீங்கி நிம்மதி நிலவும். இத்தனை காலம் இல்லாத தெளிவு உங்களிடம் காணப்படும். குடும்ப இணக்கம் ஏற்பட ஈகோ தடையாக இருக்க வேண்டாம்.

**கன்னி:** அலுவலக செயல்பாடுகள் அனுகூலமாய் அமையும். செய்யும் முயற்சிகளில் பரபரப்பும், பதற்றமும் வேண்டாம். ஒற்றுமை மேலோங்கும். காதல் விஷயங்களில் கவனம் தேவை.

**துலாம்:** சமூகத்தில் உங்கள் செயற்பாடுகள் மதிப்பு ஏற்படுத்தும். பங்கு வர்த்தகத்தில் லாபம் கிடைக்கும். குடும்ப வருத்தம் நீங்கும். வேலை விஷயமாக எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும்.

**விருச்சிகம்** வழக்குகள் சாதகமாக முடியும். கோபத்தைக் குறைக்க வேண்டும். மற்றவர்களின் அந்தரங்க விஷயத்தில் தலையிட வேண்டாம். தொழில்நுட்ப உதவியால் நன்மை ஒன்று நிகழும்.

**தனுசு:** புதிய சிக்கல் ஒன்று வந்து சரியாகும். உடல்நலம் மேம்படும். பெயர் கெடும்படியான விஷயம் எதிலும் ஈடுபட வேண்டாம். சமீபத்தில் எழுந்த பிரச்னைகளில் இருந்து வெளிவருவீர்கள்.

**மகரம்:** மற்றவர்களின் பிரச்சினையை இன்று தீர்த்து வைப்பீர்கள். இன்று தேடிவரும் வாய்ப்பை நன்கு பயன்படுத்துங்கள். என்றைக்கோ வாங்கிய சொத்து தற்போது விலை உயர்ந்திருக்கும்.

**கும்பம்:** காதல் ஒரு சிலருக்குத் திருமணத்தில் முடிந்து மகிழ்வீர்கள். பணியிடத்தில் இருந்து வந்த பிரச்னைகள் முற்றிலும் விலகும். தொட்ட விஷயம் துலங்கும். சகோதரர்களின் ஆதரவு உண்டு.

**மீனம்:** பொறுமையாக செயற்பட்டால் எதிர்கால வெற்றி உறுதியாகும். கேட்ட இடத்தில் கடன் கிடைக்கும். உழைப்பு பலன் தரும். இழுபறியாக இருந்த சில விஷயங்களை முனைந்து முடிப்பீர்கள்.

## வெள்ள இடர்ப்பகுதியில் சிரமதான நடவடிக்கை

மட்டக்களப்பு, ஜன. 29

வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பொது இடங்களை தூய்மைப்படுத்தும் செயற்பாடுகள் போரதீவுப்பற்று பிரதேச சபையால் முன்னெடுக்கப்பட்டன.

அந்தவகையில் போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வெல்லாவெளி கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள கல்லடிப் பிள்ளையார் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த சிரமதானத்தில் பிரதேச சபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், வெல்லாவெளி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் கல்லடிப் பிள்ளையார் ஆலய நிர்வாக சபையினர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ரி5-இ)


## சுதந்திரதின ஒழுங்கமைப்புக்காக போக்குவரத்துக்கள் குறைப்பு

கொழும்பு, ஜன.29

கொழும்பு சுதந்திர சதுக்க வளாக சுற்றாடலில் நாளை 30ஆம் திகதி முதல் எதிர்வரும் 3ஆம் திகதிவரையான 5 நாள்களுக்கு வாகனப் போக்குவரத்துகள் மட்டுப்படுத்தப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 4ஆம் திகதி கொழும்பில் இடம்பெறவுள்ள சுதந்திரதின பேரணிக்கான ஒத்திகை காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

ஒத்திகை நாள்களில் காலை 6 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரையும் சுதந்திர தினத்தன்று அதிகாலை 4 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரையும் இவ்வாறு போக்குவரத்து தடைசெய்யப்படவுள்ளது. இதன் காரணமாக வாகனச் சாரதிகள் இந்த கால இடைவெளியில் மாற்று வீதிகளைப் பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் அறிவித்துள்ளார். (ச-இ)



## ஹற்றன் பொஸ்கோ கல்லூரிக்குப் பூட்டு

ஹற்றன், ஜன.29

ஹற்றன் புனித ஜோன் பொஸ்கோ கல்லூரி மாணவர்கள் மற்றும் இரு ஆசிரியர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதியானதையடுத்து இக் கல்லூரி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

இப் பாடசாலையில் தரம் 9 இல் கல்வி பயின்று வந்த மாணவர் ஒருவருக்கு கடந்த வாரம் தொற்று உறுதியானதையடுத்து அவரது வகுப்பு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இருவர் தனிமைப்படுத்தப்பட்டனர். அதனைத் தொடர்ந்து முதற்கட்டமாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கைகளின் பிரகாரம் 7 மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஏனைய மாணவர்களுக்கான பரிசோதனை அறிக்கைகள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## விபத்தில் இருவர் சாவு

கொழும்பு, ஜன.29

புத்தளம் - பாலாவி - கல்லடி வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று அதிகாலை 12 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புத்தளம் - கல்லடியிலிருந்து பயணித்த லொறி ஒன்றும் மோட்டார் சைக்கிளொன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 20 மற்றும் 22 வயதான இரண்டு இளைஞர்கள் பலத்த காயங்களுக்கு உள்ளாகிய நிலையில், புத்தளம் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். பின்னர் சிகிச்சை பயனின்றி இருவரும் உயிரிழந்து விட்டனர் எனத் தெரிவிக்கப்படுவதுடன், விபத்துடன் தொடர்புடைய லொறிச் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார். (ச-இ)



## மணல் கழுவுதலை நிறுத்தக் கோரி நாசிவன் தீவு மக்கள் போராட்டம்

மட்டக்களப்பு, ஜன.29

மணல் கழுவுதல் மற்றும் அகழ்வாராய்ச்சி திட்டத்தை நிறுத்தக்கோரி நாசிவன் தீவு பிரதேச மக்கள் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை நேற்று முன்தினம் முன்னெடுத்தனர். இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தால் மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவின் நாசிவன் தீவு கிராமத்தில் அண்மையில் இந்தத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு பிரதேச மக்கள் தொடர்ச்சியாக எதிர்ப்பு வெளியிட்டு வருகின்றனர்.

இந்நிலையில், நாசீவன் தீவு கிராமத்தில் ஒன்று கூடிய பிரதேச மக்கள் கையில் பாதாகைகளுடன் கோஷங்களை எழுப்பியவாறு தியாவட்டவான், ஓட்டமாவடி, ஆகிய கிராமங்களை ஊடாக 8 கிலோ மீற்றர் தூரம் நடந்து வாழைச்சேனையை சென்றடைந்தனர். வாழைச்சேனை பொலிஸ் நிலையம், கோறளைப்பற்று பிரதேச சபை, கோறளைப்பற்று பிரதேச செயலகம் என்பவற்றுக்கு முன்பாகவும் போராட்டம் பரவலாக மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பிரதேச சபை தவிசாளர் மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோரிடம் கோரிக்கை அடங்கிய மகஜரும் கையளிக்கப்பட்டது. (வ-150)

# தொற்றைக் கையாளுவதில் இலங்கைக்கு 10ஆவது இடம்

**ஆஸ்திரேலிய சிந்தனைக் குழு ஆய்வில் தெரிவிப்பு**

கொழும்பு, ஜன.29

கொரோனா வைரஸ் தொற்றை மிகவும் திறம்பட கையாள்வது குறித்த ஆஸ்திரேலிய சிந்தனைக் குழுவான லோவி இன்ஸ்டிடியூட்டின் (Lowy Institute) புதிய பகுப்பாய்வில் இலங்கை பத்தாவது இடத்தில் உள்ளது. இந்தப் பட்டியலில் நியூஸிலாந்து முதல் இடத்தை பிடித்துள்ளதுடன், வியட்நாம், தாய்வான் மற்றும் தாய்லாந்து ஆகியவை முறையே இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது இடங்களைப் பிடித்துள்ளன. அவுஸ்ரேலியா எட்டாம் இடத்திலும் உள்ளது. அத்துடன், கொரொனாத் தொற்றால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள அமெரிக்கா 94ஆவது இடத்தையும் இந்தோனேஷியா மற்றும் இந்தியா என்பவை முறையே 85 மற்றும் 86 ஆவது இடங்களையும் வகிக்கின்றன. கிட்டத்தட்ட 100 நாடுகளின் கொரோனா நோயாளர்களது எண்ணிக்கை, உறுதிப்படுத்தப்பட்ட இறப்புகள் மற்றும் சோதனை விகிதங்கள் உள்ளிட்ட விவரங்கள் லோவி இன்ஸ்டிடியூட் ஆராய்ச்சியாளர்களால் ஆய்வு செய்யப்பட்டே இத் தரவு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (ந-இ)

# வடக்கில் ஆசிரியர் வளம் பெரும் சவாலுக்குரியது

## வடக்கு கல்வி அமைச்சின் செயலர் தெரிவிப்பு

கொடிகாமம்,ஜன. 29

**வடக்கு மாணத்தில் ஆசிரியர் வளப்பகுதி என்பது மிகுந்த சவாலுக்கு உட்பட்டதாக இருக்கிறது என்று வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தெரிவித்தார்.**

கெற்பேலி அ.த.க பாடசாலையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வகுப்பறைக் கட்டடத்தொகுதி திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஆளுநரின் பணிப்பின் பேரில், வடக்கு மாகாணத்தின் பிரதம செயலருடைய ஆலோசனைகளுக்கு அமைவாக கடந்த வருடம் இரு வேறு திட்டங்கள் ஊடாக பாடசாலைகளுடைய, உட்கட்டுமானத் தேவைகளுக்காகப் பெருமளவிலான நிதிகளைப் பெற்றிருந்தோம். பௌதீக வளங்களைப் பொறுத்த வரை எமது மாகாணங்களில் தேவைகள் ஓரளவு பூர்த்தியடைந்திருந்தாலும்கூட ஆசிரியர் வளப்பகுதி என்பது மிகுந்த சவாலுக்கு உட்பட்டதாக இருக்கிறது என்பதையும் உணர்ந்து இருக்கிறோம். இதற்காக ஆளுநர் வழிகாட்டலைத் தந்திருக்கிறார்கள்

இங்கே பல்வேறு தருணங்களில் பாடசாலைகளுக்கு பயணம் மேற்கொண்ட போது குறிப்பாக ஆரம்பக்கல்வியிலே அத்தனை மாணவர்களும் மிகத் திறமையாக இருப்பதை அவதானிக்க முடிந்தது. சரியான வாய்ப்பை நாங்கள் கொடுத்தோமாக இருந்தால் எமது எதிர்கால சந்ததியை வளம்மிக்கதாக உருவாக்க முடியுமென்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு உட்கட்டுமானத்தோடு நின்று விடாமல் எங்கள் அர்ப்பணிப்புள்ள ஆசிரியர்களுடன் ஒத்துழைக்க வேண்டியது மிக மிக முக்கியமான தாக இருக்கிறது.

இன்றைய காலகட்டத்தில் பல்வேறு பட்ட சூழல்கள், பூகோளமயமாக்கல் போன்றவை பல்வேறு சந்தர்ப்பங்களிலே எங்களுடைய சமூகத்தில் மிக மிக அதிகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதைப் பார்க்கின்ற போது மிகவும் வேதனையாக இருக்கிறது.

எங்களுடைய சமூகத்தில் மீண்டும் அந்த நல்ல உணர்வு விதைக்கப்பட வேண்டும்- என்றார். (ஐ-159)

# தனிமைப்படுத்தல் தொடர்ந்து இடம்பெறும்

*பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு*



கொழும்பு.ஜன.29

தனிமைப்படுத்தல் தொடர்பான நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

மேல் மாகாணத்தில் நேற்று வியாழக்கிழமை முதல் விசேட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.மேல் மாகாணத்தைவிட்டு வெளியேறும் நபர்களுக்கு துரித அன்டிஜன் பரிசோதனை மற்றும் பி.சி.ஆர் பரிசோதனைகள் 12 இடங்களில் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது- என்றார். (ஐ-இ)

## கர்ப்பிணிகளுக்கு சத்துணவு வழங்கல்

கொடிகாமம் ஜன 29

யாழ் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட, பொருளாதாரத்தில் பின் தங்கிய 75 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சத்து உலர் உணவுப் பொருள்கள், சாவகச்சேரி பூமாரி மண்டபத்தில் வைத்து யாழ் மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேராவால் நேற்று வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் இந்து மதக்குரு, தென்மராட்சி பிரதேச செயலர், சாவகச்சேரி பொதுச் சுகாதார பரிசோதகர், 52 ஆவது படையணியின், கட்டளைத்தளபதி, இராணுவ உயரதிகாரிகள், ஏனைய படைத்தளபதிகள், தராணா கழகத்தின் தலைவி மற்றும் பணிப்பாளர்கள், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர், வர்த்தக சங்க தலைவர், கர்ப்பிணித் தாய்மார்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ரி5-159,9)

# ஔவையார் தினம்

வவுனியா,ஜன.29

வவுனியா சின்னப்புதுக்குளம், மாமடுவ சந்தியிலுள்ள ஔவையார் சிலையடியில் அவரது தினம் நேற்றுக் காலை அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா நகரசபையின் ஏற்பாட்டில் நகர சபை உபதலைவர் சு.குமாரசாமி தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் ஔவையாரின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு, வணக்கம் செலுத்தப்பட்டது. ஆசிரியர் உதயகுமார் உரை நிகழ்த்தியிருந்தார்.

இந்நிகழ்வில் நகரசபை உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் நகர சபை ஊழியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச-110)









# வீதிகளை ஊடறுத்து கட்டடங்கள்; வயலுக்கு செல்வோருக்கு சிரமம்

முல்லைத்தீவு, ஜன.29

முல்லைத்தீவு குமாரபுரம் கிராம சேவகர் பிரிவில் வயல் நிலங்களுக்குச் செல்லும் பிரதான வீதியை ஊடறுத்து நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளதால் வயல் நிலங்களுக்குச் செல்கின்ற விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

முல்லைத்தீவு நகரத்துக்கான குடிநீர்த் தாங்கி கிச்சிராப் புரத்தில் முல்லைத்தீவு பொது மருத்துவனைக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ளது. நீர் சுத்திகரிப்பு மையங்கள் குமாரபுரத்தில் மஞ்சல் கொடி, நரி ஓட்டு போன்ற வயல் நிலங்களுக்குச் செல்கின்ற பிரதான பாதையை ஊடறுத்து அமைக்கப்பட்டுள்ளன.

இந்த வீதிக்கு அருகில் கொங்கிறீட் வீதி அமைத்துத் தருவோம் என அதிகாரிகளால் வாக்குறுதிகள் வழங்கப்பட்ட போதிலும் கடந்த மூன்றாண்டுகளாக அந்தவீதி அமைக்கப்படவில்லை. இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், கரைதுறைப்பற்று பிரதேச செயலகக் கூட்டங்களில் விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கும் பயனில்லை.

கடந்த 26ஆம் திகதி கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் த.அமலன் இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு வந்ததுடன், முல்லைத்தீவு குடிதண்ணீர் திட்டத்துக்காக வீதிகளில் வெட்டப்பட்டுள்ள குழிகள் மூடப்படாமையால் மக்கள் விபத்துகளை எதிர்கொள்கின்றனர் எனவும் சுட்டிக்காட்டினார். (வ-ரி2)

## தீர்மானங்களிலிருந்து தப்ப ஆணைக்குழுக்கள் அமைப்பு

### சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜன. 29

ஜெனிவாவில் இலங்கை அரசுக்கு எதிராகக் கடுமையான தீர்மானங்கள் வரவுள்ளன. அதிலிருந்து தப்ப வேண்டும் என்பதற்காகவே விசாரணை ஆணைக்குழுக்கள் அமைக்கப்படுகின்றன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார். மட்டக்களப்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர் முடிவடைந்து 11 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் புதிய ஆணைக்குக்களை நியமித்து எதனையும் கண்டுபிடிக்க முடியாது.

இந்த நாட்டில் ஜனாதிபதி ஆணைக்குழுக்களை அமைப்பது தொடர்பில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். கிழக்கில் தொல்பொருள் செயலணி உருவாக்கப்பட்டது. அதில் தமிழர்கள் எவரும் இல்லை. புதிய அரசமைப்பு தொடர்பில் ஆராய்வதற்கான குழுவில் பெயரளவில் தமிழர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். பொதுவாக ஜனாதிபதி நியமிக்கும் ஆணைக்குழுக்களை ஏற்றுக்கொள்ளமுடியாத நிலையே உள்ளது.

இம்முறை ஜெனிவாவில் அரசுக்கு எதிராக கடுமையான தீர்மானங்கள் வரும். அதிலிருந்து தப்பவேண்டும் என்பதற்காக இவ்வாறான ஆணைக்குழுக்கள் அமைக்கப்படுகின்றன.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை தொடர்பாக சிறுபிள்ளைத்தனமான கருத்துக்களை வெளியிடுவதை விடுத்து, இந்த நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமானால் அங்கு நீங்கள் செய்யவேண்டிய உண்மையான செயற்பாடுகளை செய்யவேண்டும். எவ்வளவு காலத்துக்கு தப்பினாலும் என்றாவது ஒரு நாள் பொறியில் சிக்கியே ஆகவேண்டும், என்றார். (ஒ.இ)

## இலங்கை அரசு மட்டுமே நினைவுகூரலை தடுக்கிறது!

### கருணாகரம் எம்.பி. காட்டம்

**மட்டக்களப்பு, ஜன. 29**

**மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) அமைப்பின் தலைவர்கள், போராளிகள் இலங்கையின் தலைநகரிலே நினைவு கூரப்படும்போது, தங்கள் உறவுகளை நினைவுகூருவதற்கு தமிழ் மக்களுக்கு மாத்திரம் இந்த அரசு தடை விதித்திருக்கின்றது. உலகத்தில் ஒரு அநியாயமான அரசாக இந்த அரசு இருக்கின்றது.**

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச்சோலை படுகொலையின் 34ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று நடைபெற்றது. பொலிஸார் தடைகளை ஏற்படுத்த முனைந்தபோதும் திட்டமிட்ட வாறு மகிழடித்தீவு கொக்கட்டிச்சோலை நினைவுத்தூபியருகே நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்வில் பங்கேற்று கருத்துத் தெரிவித்த கருணாகரன்,

இலங்கை சுதந்திரமடைந்த காலம் தொடக்கம் தமிழ் மக்கள் இரண்டாம் தர குடிமக்களாக, அடிமைகளாக நடத்தப்பட்டதன் காரணமாக அஹிம்சை மற்றும் ஆயுத ரீதியாக நாம் போராடினோம். அந்தப் போராட்டத்தில் இறந்த எமது உறவுகளை நினைவுகூருவதற்குக்கூட இந்த அரசு தடை விதிக்கின்றது. இந்த அரசின் நிலைப்பாடு எப்படி இருக்கின்றது என்பதை உலக நாடுகள் தெரிந்துகொள்ள வேண்டும். உலகின் எந்தவொரு நாட்டிலுமே இறந்தவர்களை நினைவு கூருவதற்கு தடைவிதிக்கப்பட்டதாக வரலாறுகள் இல்லை. இலங்கையில்கூட இரு வேறு காலகட்டங்களில் ஜே.வி.பி. எனும் அமைப்பு இலங்கை அரசை கவிழ்ப்பதற்காகப் ஆயுதப்போராட்டத்தைக்கைக் கொண்டிருந்தார்கள். இன்றும் அவர்களது தலைவர்கள், போராளிகள்கூட இலங்கையின் தலைநகரிலே நினைவு கூரப்படும்போது தங்களது உறவுகளை இழந்த உறவினர்கள் அவர்களை நினைவு கூருவதற்கு இந்த அரசு தடை விதித்திருக்கின்றதென்பது உலகத்தில் ஓர் அநியாய மான அரசாக இந்த அரசை அடையாளப்படுத்துகின்றது. 2015ஆம் ஆண்டிலிருந்து 2019ஆம் ஆண்டு வரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் அமைக்கப்பட்ட அரசின் காலத்திலே எந்தவித தடையுமில்லாமல் நினைவுகூரல்கள் நடத்தப்பட்டன. கோத்தாபய ஆட்சிக்கு வந்த பின்னர் நினைவிடங்களை அழிப்பதும் நினைவுகூரல்களை தடுப்பதும் நடக்கின்றன, என்றார்.

1987ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28ஆம் திகதி இறால் வளர்ப்புப் பண்ணை படுகொலை 1992ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12ஆம் திகதி மகிழடித்தீவுப் படுகொலை என்று ஏறக்குறைய 239பேர் படுகொலை செய்யப்பட்டனர் இவர்களை நினைவுகூரும் வகையிலேயே 'கொக்கட்டிச்சோலை படுகொலை நினைவுத்தூபி' அமைக்கப்பட்டுள்ளது. (ஒ.இ)

## சமூக விரோதச் செயலில் ஈடுபட்ட நால்வர் கைது!

திருகோணமலை, ஜன.29

திருகோணமலையில் மசாஜ் நிலையம் என்ற போர்வையில் சமூக விரோதச் செயலில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் நான்கு பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கல்கமுவ, தம்புள்ளை மற்றும் மாத்தளைப் பகுதியைச் சேர்ந்த 31, 34 மற்றும் 36 வயதுடைய மூன்று பெண்களும், ஆண் ஒருவருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் திருகோணமலை மத்திய வீதிப் பகுதியில்அமைந்துள்ள பாடசாலை ஒன்றின் எதிரே மசாஜ் நிலையம் என்ற பெயரில் நிலையமொன்றை சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டனர் என்று திருகோணமலைப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களை திருகோணமலை நீதிமன்றில் நீதிவான் முற்படுத்திய போது அவர்களை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (ற-இ)

## குருந்தூரில் வழிபாட்டு அடையாளங்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளன

### முல்லை பொலிஸ் நிலையத்தில் ரவிகரன் முறைப்பாடு

முல்லைத்தீவு, ஜன.29

முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு குருந்தூர் மலையில் இருந்த தமிழர்களுடைய வழிபாட்டு அடையாளங்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளன என முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், அப்பகுதி கிராம மக்களின் சார்பாக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் முறைப்பாடொன்றைப் பதிவு செய்துள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்ட இவ் வழிபாட்டு அடையாளங்கள் மீண்டும் அவ்விடத்தில் நிறுவப்பட வேண்டும் எனவும், தொடர்ந்தும் தமிழ் மக்கள் குருந்தூர் மலைக்குச் சென்று தமது வழிபாடுகளை மேற்கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும் எனவும் அவர் தனது முறைப்பாட்டினூ டாக கோரியுள்ளார்.

அம் முறைப்பாடு தொடர்பில் ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில்,

குறித்த சம்பவம் தொடர்பில் எனக்கு தகவல் தரப்பட்டது. இதற் கமைய குருந்தூர்மலை ஆதிசிவன், ஐயனார் கோவிலுக்கு இன்று(நேற்றுமுன்தினம்) நாடாளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர்மலநாதன், சிவஞானம் சிறீதரன் மற்றும் நானும், சில பிரதேசசபை தவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்களோடு சென்றிருந்தோம். அப்போது மக்களால் முறையிடப்பட்டதைப் போலவே, அங்கு சென்ற எங்களை அங்கிருந்த இராணுவத்தினர் மலைப் பகுதிக்குச் செல்லவிடாது தடுத்திருந்தனர். பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், இதுதொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்திய நிலையில் குருந்தூர் மலைப் பகுதிக்குச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டோம்.



நாம் அறிந்ததைப்போலவே அங்கிருந்த தமிழர்களின் வழிபாட்டுச்சின்னங்களும் அகற்றப்பட்டிருப்பதை அவதானிக்கமுடிந்தது. இது தொடர்பிலே, இன்று(நேற்றுமுன்தினம்) முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் அப்பகுதிக் கிராம மக்களின் சார்பாக முறைப்பாடொன்றைப் பதிவுசெய்துள்ளேன் - என்றார். (ரு-246)

## அறுவடை செய்யும் நெல்லில் ஒருபகுதியை சபைக்கு வழங்கவும்

### புத்தூர் கமநல பெரும்போக உத்தியோகத்தர் தெரிவிப்பு

அச்சுவேலி, ஜன.29

விவசாயிகள் அறுவடை செய்யும் நெல்லில் குறிப்பிட்ட அளவை நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு விற்பனை செய்ய வேண்டும் என்று புத்தூர் கமநல பெரும்போக உத்தியோகத்தர் சி.ரகுபரன் அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

'60 பரப்பு முதல் 89 பரப்பு வரை நெற்செய்கை பண்ணிய விவசாயிகள் ஆயிரம் கிலோ நெல்லையும், 90 முதல் 120 பரப்பில் செய்கை பண்ணிய விவசாயிகள் ஆயிரத்து 500 கிலோ நெல்லையும் நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு விற்பனை செய்ய வேண்டும்.

நெல் செய்கை பண்ணும் விவசாயிகள் உரமானியம் பெற்றவர்கள் இவர்கள் நெல்லை சந்தைப்படுத்தும் சபைக்கு விற்பனை செய்யாவிடில் எதிர்காலத்தில் உரமானியம் பெற முடியாது.

சம்பந்தப்பட்ட விவசாயிகள் 5ஆயிரம் கிலோ நெல்லை சந்தைப்படுத்தும் சபைக்கு வழங்கலாம்.

நெல்லை சந்தைப்படுத்தும் சபைக்கு வழங்கிய விவசாயிகளுக்கு 2021 ஆம் ஆண்டு சிறுபோக பயிர்ச் செய்கைக்கான உரமானியம் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்- என்றார். (ஐ-11)

# ஜனாஸாக்களை ஐ.நாவில் புதையுங்கள்

## மேர்வினின் வில்லங்க விளக்கம் இது

கொழும்பு, ஜன. 29

கொரோனாவால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை புதைக்க முடியும் என்று ஐ.நா. குறிப்பிட்டுள்ளது. அவ்வாறாயின் ஜனாஸாக்களை அங்கு கொண்டு சென்று புதைத்துக் கொள்ளுங்கள். இலங்கையில் அவற்றைப் புதைக்க முடியாது. இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துவெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை விற்க வேண்டாம் என்று மகாநாயக்க தேரர்கள் குறிப்பிடும் கருத்துக்கு மதிப்பளியுங்கள். தேசிய வளத்தை பாதுகாக்க அனைத்து இன மக்களும் ஒன்றிணைய வேண்டும். மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசு மகாநாயக்க தேரர்களின் கருத்துக்கு மதிப்பளித்து சுயாதீனமாகச் செயற்படும். ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை, ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிடும் வகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச செயற்படவில்லை. ஜனாதிபதி கோத்தாய ராஜபக்சவும் செயற்படமாட்டார். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தேசிய வளங்களை விற்கவில்லை.

ஐக்கிய தேசியக்கட்சி தலைமையிலான நல்லாட்சி அரசு அம்பாந்தோட்டை துறைமுகத்தை விற்றமை தவறு. தற்போதைய எதிர்க்கட்சியினர் அப்போது அதனை எதிர்க்கவில்லை. பொது ஜன பெரமுன கடந்த அரசில் எதிர்க்கட்சியாக செயற்பட்ட வேளை அம்பாந்தோட்டை துறைமுகத்தை பாதுகாக்க முறையாகச் செயற்படவில்லை- என்றார். (ஒ-இ)

## மரண அறிவித்தல்

பிறப்பு 25 . 05 . 1937



இறப்பு 28 . 01 . 2021

### இராமுப்பிள்ளை செல்வரத்தினம்

புதிய செம்மணி வீதி கல்வியங்காட்டை பிறப்பிடமாகவும் நல்லூர் வடக்கு விநாயகர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமுப்பிள்ளை செல்வரத்தினம் நேற்று (28.01.2021) வியாழக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்ற இராமுப்பிள்ளை தங்கம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரரும். சிவகாமசுந்தரியின் அன்புக் கணவரும். காலஞ்சென்ற காசிப்பிள்ளை இராசம்மாவின் பாசமிகு மருமகனும். காலஞ்சென்ற சிவராசாவின் அன்புத் தம்பியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (29.01.2021) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2.00 மணியளவில் கல்வியங்காடு செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்

தகவல்: சகலன்
சி.சிவபாலசுப்பிரமணியம்
(மணியம்)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சீனித்தம்பி கமலநாதன்**

மலர்வு 19.12.1939 — உதிர்வு 25.01.2016

திதி:
பிரதமை (29.01.2021)

ஆறாத்துயரில் ஆண்டுகள் ஐந்து கழிந்ததப்பா.
மீளாத்துயில் கொண்டு எமை ஏன் பிரிந்தீர்கள் அப்பா.
நிதம் உங்களைத் தேடியலைகின்றோம். அப்பா
உங்கள் ஆத்மா சாந்திபெற வேண்டலைத் தவிர
வேறேதுவும் முடியவில்லை அப்பா....

சாந்தி நிஹேறதன்
வதிரி

நீங்கா நினைவுகளுடன்
குடுமபத்தினர்
( பராக்கோ மோட்டர்ஸ்)

## கல்முனை மாநகர சபை நிதி நிலையில் குழுவுக்கு உறுப்பினர்கள் தெரிவு

கல்முனை, ஜன.29

கல்முனை மாநகர சபையின் நிதி நிலையில் குழுவுக்கு இரகசிய வாக்கெடுப்பு மூலம் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கல்முனை மாநகர சபையின் மாதாந்த பொதுச் சபை அமர்வு நேற்றுமுன் தினம் மாநகர மேயர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் நடைபெற்றது. இந்த அமர்வில் நடப்பு ஆண்டுக்கான நிலையியல் குழுக்களுக்கான அங்கத்தவர்கள் தெரிவும் இடம்பெற்றது. இதில் பிரதான குழுவான நிதிக் குழுவுக்கு 5 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 7 உறுப்பினர்களின் பெயர்கள் பிரேரிக்கப் பட்டதால் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதன்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினரான பிரதி மேயர் ரஹ்மத் மன்சூர் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஏ.ஆர். அமீர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களான பொன் செல்வநாயகம், எஸ்.குபேரன், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர் சி.எம்.முபீத் ஆகியோர் கூடிய வாக்குகளைப் பெற்று நிதிக்குழுவுக்குத் தெரிவாகியுள்ளனர். மாநகர மேயர் ஏ.எம்.ற கலாசார மற்றும் விளையாட்டு நிலையியற் குழுக்களுக்கான உறுப்பினர்கள் வாக்கெடுப்பின்றி சாதாரண முறையில் தெரிவு செய்யப்பட்டனர். (வ-30)

## மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 03 . 1937



மறைவு 28 . 01 . 2021

### திருமதி ஆறுமுகம் இலட்சுமி

புங்குடுதீவு 1ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் இல.287 யூனிற் இராமநாதபுரம் வட்டக்கச்சியை வதிவிடமாவும் கொண்ட ஆறுமுகம் இலட்சுமி அவர்கள் நேற்று (28.01.2021) வியாழக்கிழமை அன்று இறைபாதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா ஆச்சிமுத்து ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஆறுமுகம் (துறையர்) என்று அழைக்கப்படுபவரின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற நாகராசா செல்லம்மா, பொன்னையா சண்முகராசா, பேரம்பலம் தங்கரத்தினம், பொன்னையா கணேஷன் (குடிவரவு குடியகழ்வு திணைக்களம் லீடர்) பொன்னையா துறைசிங்கம், பொன்னையா சற்குணம் ஆகியோரின் சகோதரியும், மாணிக்கம், ராசன் நாகேஸ்வரி (நாகேஸ்) சிறிகரன் (கனடா) உதயகுமாரி (கனடா) ஆகியோரின் அன்பு தாயும், இராசலட்சுமி, புஸ்பராணி, காலஞ்சென்ற அன்னராசா ரவிச்சந்திரன் (கனடா) தேவி (கனடா) அவர்களின் அன்பு மாமியாரும், பிரதீஸ் (ஸ்ரீராம் நகைமாடம்), காலஞ்சென்ற பிரபாகரன் (கிருபன்), பிரதீபன் (குட்டிமணி-கனடா), காலஞ்சென்ற பிரகாஷ், சாந்தன் (அவுஸ்திரேலியா), பிரதீபா, விஜித்திரன் (விஜி-பிரான்ஸ்) வித்தியா, சசிகா, லின்ரன், கம்ஷா, காவேரி, இந்திரன், கதிர்நிலா (வவா-ஜேர்மனி) கவிதா (கனடா) விது (கனடா) அபி (கனடா) கபி (கனடா) ஆகியோரின் அன்பு பேர்த்தியும், பவிஷன், யதுஷன், பிரவீன் (கனடா) பிரதிக்ஷா (கனடா), அபி (கனடா) மது (கனடா) டசி (கனடா) பிபின் (கனடா) பிறை (அவுஸ்திரேலியா) யனுசி (அவுஸ்திரேலியா) சச்சின், நிதர்சனா டிசாந், மதுஷா, அக்ஷஜன், அயிசா, டஸ்மியன், சண்யஜனா, லக்சாயினி, கிதுஷன், விஷாலினி, லதிக்கா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின. பூதவுடல் இன்று (29.01.2021) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து மம்மின் இந்து மயானத்துக்கு தகனம் செய்யப்பட எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
076 6464 520

உசிவமயம்
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்



### திரு. கார்த்திகேசு முருகையா
(சுழல் மேடை முருகையா)

காளிகோவிலடி மல்லாகத்தை பிறப்பிடமாகவும், மாவிட்டபுரம் மற்றும் மல்லாகத்தை வதிவிடமாகவும் கொண்ட கார்த்திகேசு முருகையா அவர்கள் (27.01.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு இராசம்மாவின் மகனும், காலஞ்சென்ற கந்தையா இரத்தினம் ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்ற சோதியம்மாவின் அன்பு கணவரும், மகேஸ்வரி (பொன்னுப்பிள்ளை) காலஞ்சென்ற சிதம்பரபிள்ளை மற்றும் கிருஸ்ணபிள்ளை ஆகியோரின் சகோதரனும், றகுறாஜ், அருள்ராஜ், தர்மினி, குகறாஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சர்வேஸ்வரன் (கிளி), ஜனுஜா, கவிதா, ஜெயந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும், திலீப், கேனுஜா, யஸ்மினா, சுஜெய், யனித், நவீந், சஸ்மிதன், சஸ்விகன், சனோஜன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2021) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காளி கோவிலடி,
மல்லாகம்.

தகவல்:
குடும்பத்தினர்
0777 173 833

**வாடகைக்கு / குத்தகைக்கு**

ராஜா கிறீம் ஹவுஸ் எதிராக உள்ள (நாச்சிமார் கோவிலடி) 2 பரப்பு காணியுடன் கூடிய வீடு வாடகைக்கு / குத்தகைக்கு கொடுக்கப்படும்.
தொடர்பு இல.- 077 834 6071

**விற்பனைக்கு**

வெதுப்பக உற்பத்திக்குரிய உபகரணங்களாகிய டீசல் அவன், மா.குழைக்கும் மிசின், கேக் மிஷின், பாண் வெட்டும் கட்டர், வளைவு சோக்கேஸ், கண்ணாடி அலுமாரி குளிர்சாதன பெட்டிகள், நெஸ்கோப்பி மிசின், மேசைகள், கதிரைகள், இறாக்கைகள் மேலும் பல பொருட்கள் விற்பனைக்கு உண்டு.
தொ.இல.: 0777 283 705

**வீடு விலைக்கு தேவை**

யாழ்ப்பாணம், நல்லூர் கொக்குவில், திருநெல்வேலி, கோண்டாவில் போன்ற இடங்கள் விரும்பத்தக்கது.
தொ.இல.: 077 444 0199

**டிப்பர் விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள லங்கா அசோக் லேலண்ட் கார்கோ மொடல் டிப்பர் விற்பனைக்குண்டு.
உற்பத்தியாண்டு 2011
077 721 5165

**வேலையாள் தேவை**

யாழ்ப்பாணத்தில் உள்ள பண்ணை ஒன்றில் தங்கியிருந்து வேலைசெய்யக் கூடிய ஒருவர் தேவை. தங்குமிடம், உணவு இலவசம். குடும்பமாக தங்குபவர்களும் வரலாம்
077 397 6203

**கணக்கீட்டு உதவியாளர் தேவை (பெண்)**

மயிலிட்டியில் அமைந்துள்ள எமது கிளை நிறுவனத்துக்கு கணக்கீட்டு உதவியாளர் தேவை.
1. கல்வித்தகமை :- க.பொ.த உயர் தரம் (வர்த்தகப் பிரிவு) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. கணனினி அறிவு உடையவராக இருத்தல் வேண்டும்.
3. வயது :- 22 - 26
4. வதிவிடம், கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
5. அண்மையில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

நேர்முகத்தேர்வு :- 30.01.2021 சனிக்கிழமை காலை 10.00 முதல் 12.00 வரை
தொடர்புகளுக்கு: MALBA ROPES (PVT) LTD,
K.K.S. Point Petro Road, Mayilliddy.
021 222 0090, 077 959 8231 (kandee7030@gmail)

**புறொயிலர் கோழி விற்பனை**

50kg ற்கு மேல் புறொயில் கோழி கொள்வனவு செய்பவர்களுக்கு 1-kg 350 /= வீதம் தரப்படும்.
கோழிப்பண்ணை மற்றும் கோழி இறைச்சிக் கடையில் வேலை செய்வதற்கு ஆண். பெண் வேலை ஆட்கள் தேவை.

கோழி பெறும் இடங்கள்
1. வில்வளை, மாதகல் 2. துர்க்கா மில் அலுகாமை, மானிப்பாய்
3. கராஜ் வீதி, சண்டிலிப்பாய் 4. மதவடி, பண்டத்தரிப்பு 5. சத்தியக்காடு சுழிபுரம் பண்ணாகம்
6. பாணாவெட்டி சுழிபுரம் 7. தெல்லிப்பயை வீதி, பெரியவிளான்

தொடர்பு
077 2718 149, 077 3266 732
Viber: 0041779243687

**கேள்வி விண்ணப்பம் கோரல்**
**நலன்புரி சேவைகள் நிலையம்**

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கமானது வைத்தி யசாலை வளாகத்தில் இயங்கும் நலன்புரிசேவைகள் நிலையத்தை (காகிதாதிகள், அலுவலக உபயோகப்பொருள்கள், போட்டோகொப்பி, லெமினேற்றிங், ஸ்கானிங், பிறிண்டிங், கைத்தொலைபேசி மீள்நிரப்பல் அட்டைகள் மற்றும் ஏனைய சேவைகள்) 01.03.2021 முதல் 31.12.2021 வரை குத்தகைக்கு நடத்துவதற்கு கேள்வி விண்ணப்பம் கோரப்படுகிறது. இதற்கான விண்ணப்பப் படிவங்களை மீளளிக்கப்படாத தொகை ரூபா 1000/= இனைச் செலுத்தி 01.02.2021 முதல் 14.02.2021 காலை 09.00 மணிவரை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ள முடியும். விண்ணப்பங்கள் 14.02.2021 காலை 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

அன்றையதினமே (14.02.2021) காலை 11.00 மணிக்கு நடைபெறும் எமது நிர்வாகசபை கூட்டத்தில் இவ்விண்ணப்பங்கள் அனைத்தும் பரிசீலிக்கப்படும்.

Dr. V.கமலநாதன்
தலைவர் நோயாளர் நலன்புரிச் சங்கம்,
ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை.

மேலதிக தொடர்புகளுக்கு
021 226 3261, 021 226 3262

# ராஜபக்சக்கள் வளர்த்த கடா அவர்கள் மார்பில் பாய்கிறது!

## மனோ எம்.பி. சாட்டை

**கொழும்பு, ஜன. 29**

**எதிர்க்கட்சியிலிருந்த போது ஒவ்வொரு நாளும், தாம் தூண்டி வளர்ந்து விட்ட இனவாதிகள், பௌத்த தேரர்கள், தொழிற்சங்கங்களின் பிடியிலிருந்து, விடுபட முடியாமல், நந்தசேன கோத்தாபய ராஜபக்ச அரசு, இன்று விழிபிதுங்கி போய் தத்தளிக்கிறது. இவ்வாறு கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனநாயக மக்கள் முன்னணி மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அமெரிக்க அரசுடன் எம்.சி.சி. ஒப்பந் தம் குறிந்து நாம் பேசிய போது, அதை எதிர்த்து நாட்டில் குழப்பத்தைத் தாண்டி, இதுபற்றி ஒன்றுமே தெரியாத, வண. உடுதும்பர காஸ்யப்ப என்ற தேரரை கொண்டு வந்து சாகும்வரை உண்ணா விரதம் இருக்க வைத்தவர்கள் ராஜபக்சக்களாவர். ஆட்சிக்கு வந்தவுடன், எம்.சி.சி. ஒப்பந்தம் மூலம் அமெரிக்கா நன்கொடையாக வழங்கவிருந்த 400 மில்லியன் அமெரிக்க டொலர் பணத்துக்கு ஆசைப்பட்டு, அமெரிக்காவுடன் பேச்சை ஆரம்பித்தார்கள்.

எம்.சி.சி. ஒப்பந்தத்தில், 70 சத விகிதம் நல்லதே என்று உதய கம்மன்பில என்ற அமைச்சர் சொன்னார். ஆனால், கடைசியில் 'சரிதான் போங்கடா' என, அமெரிக்கா எம்.சி.சி. ஒப்பந்தத்தையும், 400 மில்லியன் அமெரிக்க டொலரையும் எடுத்துக்கொண்டு போய் விட்டது.

'ஐயோ, கைக்கு வந்தது, வாய்க்கு எட்டவில்லையே' என கை விட்டுப் போய்விட்ட 400 மில்லியன் அமெரிக்க டொலர் பணத்தை நினைத்து நந்தசேன கோத்தாபய ராஜபக்ச அரசின் உள்ளே ஒப்பாரி ஓலம் கேட்டது.

கொழும்புத் துறைமுக கிழக்கு முனைய விவகாரத்தில் இந்தியா, ஜப்பான் நாடுகளை பங்காளிகளாக்க கடந்த அரசு திட்டமிட்டபோது, அதை எதிர்த்து, தமது தொழிற்சங்கங்களையும், தேரர்களையும் தூண்டிவிட்டு தெருவில் இறக்கி அரசியல் செய்த, மஹிந்த ராஜபக்ச, விமல் வீரவன்ச, வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில ஆகியோர் அடங்கிய கூட்டணி, இன்று நந்தசேன கோத்தாபய ராஜபக்ச தலைமையில் ஆட்சி அமைத்தவுடன், சுருதி இறங்கிப் பேசுகிறது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் மோதவும் முடியாமல், இந்தியாவின் பாதுகாப்புக்கு சிக்கலை ஏற்படுத்தியுள்ள, இதே கொழும்பு துறைமுகத்தில் 85 சத விகித பங்குரிமையுடன் இவர்கள் சீனாவின் சைனா மெர்ச்சன்ட் நிறுவனத்துக்கு வழங்கியுள்ள சீஜசீடி என்ற இன்னொரு முனையத்தை திரும்பி வாங்கவும் முடியாமல், ராஜபக்ச அரசு இன்று விழி பிதுங்கி போய் நிற்கிறது என்றார்.

(ஒ.இ)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி....

### பச்லெட்டின்...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி ஜெனீவாவில் ஆரம்பமாகவுள்ளது. அதில் இலங்கை தொடர்பாக ஆணையாளர் மிக்செல் பச்லெட் சமர்ப்பிக்கவுள்ள அறிக்கை ஐக்கிய நாடுகள் சபையால் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபைக்கான பிரிட்டனின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ஜுலியன் பிரெய்த்வெய்ட், தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

"இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை வெளியிட்டிருக்கும் மிக முக்கியமான அறிக்கையில் நாம் அவதானம் செலுத்தியிருக்கின்றோம். எதிர்வரும் கூட்டத் தொடரில் இலங்கையில் மனித உரிமைகளையும், பொறுப்புக்கூறுதலையும் உறுதிப்படுத்துவதை முன்னிறுத்தி நாம் ஆதரவு வழங்குவோம்" என்று அதில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாகக் கனேடிய வெளிவிவகார அமைச்சர் மார்க் கார்னே தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவொன்றைப் பதிவிட்டுள்ளார்.

"இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை உறுதி செய்வதன் அவசியத்தை அடிக்கோடிட்டுக் காட்டும் வகையில் ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை அமைந்திருக்கின்றது. இலங்கையில் அமைதி, நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் என்பவற்றை உறுதி செய்வதற்காக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு முழுமையான ஆதரவை வழங்க கனடா தயாராக இருக்கின்றது" என்று அவர் அந்தப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

(எ-இ)

**தவறவிடப்பட்டது**

1 கைச்செயின் ஒன்று 27.01.2021 அன்று 11.30 மணியில் இருந்து 14.30 மணிக்கிடையில் கச்சேரியில் இருந்து கச்சேரி நல்லூர் றோட்டால் வந்து நாவலர் றோட்டில் திருப்பி கஸ்தூரியார் றோட்டால் திருப்பி அரசடி றோட்டால் தட்டாதெரு சந்தியால் K.K.S. றோட் பக்கம் திரும்பி நாச்சிமார் கோவிலுக்கு. இடையில் தவறவிடப்பட்டு விட்டது. கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து கீழ்காணும் தொலைபேசி இலக்கத்திற்கு தகவல் தரவும்.
T.P: 075 393 2608

**P.P.T நிறுவனத்தின் விசேட சலுகை**



ups sky cargo solutions DHL
உள்நாட்டு / வெளிநாட்டு பார்சல் சேவை
UK 1000/-

A/C 1000/-
பருத்தித்துறை/நெல்லியடி
யாழ்ப்பாணம்-கொழும்பு

Non A/C 900/-
பண்டத்தரிப்பு/சித்தங்கேணி
சங்கானை/மானிப்பாய்
யாழ்ப்பாணம்-கொழும்பு


300க்கு மேற்பட்ட நாடுகளுக்கான
வெளிநாட்டு
பார்சல் சேவை நடைபெறுகிறது.
நிபந்தனைக்கு உட்பட்டது.

| யாழ்ப்பாணம் | புறக்கோட்டை | வெள்ளவத்தை |
|---|---|---|
| 0764408947 | 0764408954 | 0764408951 |
| 0775731318 | 0112320336 | 0775755175 |

# சர்வதேச திரைப்பட விழா: இரண்டாம் கட்டத் திரையிடல்

யாழ்ப்பாணம் ஜன. 29
'சர்வதேச திரைப்பட விழா 2020' இன் இரண்டாம் கட்டத் திரையிடல் யாழ்ப்பாணத்தில் இன்று ஆரம்பமாகவுள்ளது.
இன்று தொடக்கம் நாளைமறுதினம் 31ஆம் திகதி வரையில் ஒரு கட்டமாகவும், எதிர்வரும் 5ஆம் திகதி தொடக்கம் 7ஆம் திகதி வரை இரண்டாம் கட்டமாகவும் திரைப்படங்கள் திரையிடப்படவுள்ளன.
ஈழத்துக் குறும்படங்கள், சிங்கள மொழியிலான குறும்படங்கள், ஜேர்மனிய, கேரள, தமிழ் நாட்டு திரைப்படங்கள் என்பவை இதன்போது திரையிடப்படவுள்ளன.
இலக்கம் 50, கண்டி வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள கலத்தில், இந்தத் திரைப்பட விழா இடம்பெறவுள்ளது. சுகாதார நடைமுறைகளுடன் மட்டுப் படுத்தப்பட்ட ஆசனங்களே உள்ளதால் kalamjaffna@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியில் ஆசனப் பதிவை மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (ஒ.இ)

## மரண அறிவித்தல்



டாக்டர்

### கந்தையா ரட்ணகுமார்

(Retired Consultant Orthopaedic Surgeon Barking Havering Redbridge NHS Trust)

வயது-69

பிறப்பு 15.04.1951 இறப்பு 26.01.2021

யாழ். சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா ரட்ணகுமார் அவர்கள் 26.01. 2021 செவ்வாய்க்கிழமை அன்று கால மானார். அன்னார், காலஞ்சென்றவர்களான கந்தையா ஆசைப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், காரைநகர் வாரிவளவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், காரைநகர் வாரிவளவைச் சேர்ந்த சறோஜினி (Retired Consultant Anaesthetist) அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற ரட்ணேஷ்வரி, முருகரட்ணம், வன்னியநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற குமாரவேலு, சண்முகதேவி, சூரியகுமாரி, காலஞ்சென்ற செல்வரட்ணம், சாரதாதேவி, காலஞ்சென்ற சாவித்திரிதேவி, சிவமணிதேவி, பத்மநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், பத்மதேவி, ராசநாதன், சாரதா ஆகியோரின் அன்புச் சகலனும், வசந்தி- பத்மநாதன், வசந்தகுமார்- கத்தரின், கல்யாணி- கண்ணன், சிறீஸ்கந்தன் -அக்ணிஷ்கா, காஞ்சனா- செந்தூரன், சுகந்தன், வசந்தன் -வித்தியா ஆகியோரின் அன்பு மாமனாரும், குகாயினி- குறிஞ்சிக்குமரன், தாட்ஷாயினி- தயாரூபன், உஷாயினி ஆகியோரின் பாசமிகு பெரியதந்தையும், தமயந்தி- சங்கர், குமணன்- ஜெனி ஆகியோரின் அன்புச் சிறியதந்தையும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.02.2021 அன்று லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:

| | |
|---|---|
| சறோஜினி ரட்ணகுமார் - மனைவி | +447801705151 |
| முருகரட்ணம் - சகோதரர் | +94774252666 |
| வன்னியநாதன் - சகோதரர் | +33610263708 |
| குமாரவேலு வசந்தகுமார் - மருமகன் | +447949108115 |
| கல்யாணி கண்ணன் - மருமகள் | +447947273111 |

தகவல்:
பத்மநாதன் (நாதன்)
மைத்துனர்
நியூஸ்லண்ட்
Mobile - +64210412303

## மரண அறிவித்தல்

பிறப்பு 29 01 1933



இறப்பு 28 01 2021

### திருமதி. சங்கரநமசிவாயகம் சிவபாக்கியம்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் புன்னாலைக்கட்டுவன் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சங்கரநமசிவாயகம் சிவபாக்கியம் அவர்கள் நேற்று (28.01.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - அன்னமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான சிவஞானம், குமாரசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சிவலிங்கம், சிவகங்கை ஆகியோரின் மைத்துனியும் குகநேசன் (கோணேஸ்) (விஞ்ஞானபீட மாணவன் 1995 - 96 கல்வியாண்டு, யாழ்.பல்கலைக்கழகம்) அவர்களின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2021) வெள்ளிக்கிழமை மு.ப. 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.00 மணியளவில் குப்பிளான் காடாகரம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொ.பே: 077 51 73040
021 224 2201

தகவல்:
சிவலிங்கம் குடும்பத்தினர்.

### விபத்தில் ஒருவர் காயம்

மாட்டுடன் மோதிய மோட்டார் சைக்கிள் எதிரே வந்த பட்டா ரக வாகனத்துடனும் மோதுண்டதில் மோட்டார் சைக்கிளில் சென்றவர் காயமடைந்தார். அவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளார்.
இந்த விபத்து நேற்று முன்தினம் தென்மராட்சி வேம்பிராய் சந்திக்கு அருகாமையில் இடம்பெற்றுள்ளது. மாடு திடீரென்று வீதியின் குறுக்கே ஓடியதால் விபத்து ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. புத்தூர் கிழக்கைச் சேர்ந்த 31 வயதுடையவரே காயமடைந்தார். (து159)

## மரண அறிவித்தல்

### காராளபிள்ளை வடிவாம்பிகை



தோற்றம் 16.05.1940 மறைவு 28.01.2021

நயினாதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட காராளபிள்ளை வடிவாம்பிகை அவர்கள் 28.01.2021 வியாழக்கிழமை நயினாதீவில் இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற காராளபிள்ளை (பிரபல வர்த்தகர் விக்கினேஸ்வரா ஸ்ரோர்ஸ் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வீரகத்திப்பிள்ளை அன்னம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற நாகமுத்து தையலம்மை தம்பதியரின் பாசமிகு மருமகளும், சர்வானந்தசிவம், கிருபானந்தசிவம், ரதீஸ்வரி, நீலானந்தசிவம், காலஞ்சென்ற விநாயகசிவம் (கண்ணா) மற்றும் பாலேஸ்வரி, நித்தியானந்தசிவம், குகணேஸ்வரி, கோபாலசிவம் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான இராசரெத்தினம், சண்முகரெத்தினம் மற்றும் மகேஸ்வரி, சகுந்தலாதேவி, இந்திராதேவி, பிரேமளாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், மீனாவதி, தயாளினி காலஞ்சென்ற லோகநாதன் மற்றும் அமுதபதி, முருகவேள், தெய்வரஜனி, ஸ்ரீகாந்தமணி, யசோதினி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சபாரெத்தினம், சிவக்கொழுந்து, இராசையா, இராசம்மா, கோபாலபிள்ளை, கணபதிப்பிள்ளை மற்றும் கனகம்மா, காலஞ்சென்றவர்களான திருலிங்கநாதன், கந்தசாமி மற்றும் ஆனந்தசிவம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான பார்வதி, அமுதலிங்கம், நாகம்மா, பார்வதி, சின்னத்துரை, பாக்கியலெட்சுமி, சிவப்பிரகாசம் மற்றும் நாகரெத்தினம், இலட்சுமி ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும், கோபிநாத், நிலக்ஷனா, தனுராஜ், சரண்யா, சரணியன், சாமினி, சஞ்சித், சாலினி, மதுசாகி, நிதுனன், சயனவி, சாரங்கி, தீரன், காருணி, ரம்மியா, சசிகாந், மகிழவன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2021) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 1 மணியளவில் சல்லிப்பறவை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
5ஆம் வட்டாரம், நயினாதீவு. குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 07 . 1938



மறைவு 27 . 01 . 2021

### திரு. A.S.சங்கரப்பிள்ளை ஞானப்பிரகாசம்

**(ஓய்வுபெற்ற பட்டய கணக்காளர், காரைநகர் பாலாவோடை குறிஞ்சாகுளி ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான அறங்காவலர்)**

யாழ். காரைநகர் களபூமி பாலாவோடையைப் பிறப்பிடமாகவும், ILFORD - Lonadn ஐ வதிவிடமாகவும் கொண்ட திரு. A.S. சங்கரப்பிள்ளை ஞானப்பிரகாசம் அவர்கள் நேற்று முன்தினம் (27.01.2021) புதன்கிழமை லண்டனில் இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முகாந்திரம் A.S. சங்கரப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான A.S.கந்தையா, A.S. ஆறு முகம் ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்றவர்களான குமாரிசங்கரி ஆறுமுகம்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், வசந்தாதேவியின் அன்புக் கணவரும், நிர்மலா, தர்மஜா, கவீதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுரபாஸ்கரன், சேவியர், டன்கன் ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற அன்னம்மா, காலஞ்சென்ற இராசரத்தினம், காலஞ்சென்ற செல்வராஜா, பத்மாவதி, காலஞ்சென்ற இராஜேஸ்வரி, பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற Dr. வைத்தியலிங்கம், மனோன்மணி, புஸ்பலோஜினி, பாலசண்முகம், தனபாலசிங்கம், காலஞ்சென்ற சுகந்தமலர், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (தவமலர்), யோகேஸ்வரி (மகேந்திரராசா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், யாதவன், மதுரா, அரன், ஐஸ்வர்யா, சங்கர் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: மனைவி.**

தொடர்பு:
**0044 7756 011 089**
**0044 7814 716163**

**ச.ச.பாலச்சந்திரன் - சகோதரன்**
**(077 854 6610)**

## பஸ் மோதி மாணவி காயம்

கொடிகாமம், ஜன. 29

சைக்கிளில் பாடசாலைக்குச் சென்ற மாணவி விபத்துக்குள்ளானார். சம்பவம் கச்சாய் சந்தியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. தனியார் பஸ் மோதியதில் விபத்து இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. காயமடைந்த மாணவி சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (த-159)

## மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 09 . 1963



மறைவு 28 . 01 . 2021

### அருணாச்சலம் ஸ்ரீ சுகுமார் (உருத்திரன்)

(ஓய்வுபெற்ற தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்க முன்னாள் ஊழியர்)

தையிட்டி வடக்கினை பிறப்பிடமாகவும் உடுவில் கிழக்கு கற்பகப் பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட அருணாச்சலம் ஸ்ரீ சுகுமார் நேற்று (28.01.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாச்சலம் - அன்னபூரணம் தம்பதியரின் அன்பு இளைய புதல்வனும், காலஞ்சென்றவர்களான நவரத்தினம் - தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், நந்தினியின் அன்புக் கணவரும், மகேஸ்வரனின் அன்புத் தம்பியும், யசோதாவின் மைத்துனரும், சிவதர்சினி, சஞ்ஜீவன், சிவஜீவன் ஆகியோரின் சித்தப்பாவும், காலஞ்சென்ற இராசநாயகம், செல்வநாயகம், பாஸ்கரன், மனோகரன், நவசீலன், நாகேஸ்வரி, நாகேஸ்வரன், பிரபாலினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2021) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவம்.

**உடுவில் கிழக்கு,**
**கற்பகப் பிள்ளையார் கோயிலடி,**
**சுன்னாகம்.**
**077 115 0167**

**தகவல்:**
**மனைவி**

## அந்தியேட்டி நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 29 • 10 • 1933



மறைவு 16 • 12 • 2020

### திருமதி நாகம்மா குலசேகரம்பிள்ளை (J.P)

திதி: துதியை

எழுதுமட்டுவாள் தனில்
பூவாய் மலர்ந்தாயம்மா
பழமுதிர் சோலைதனில்
மகிழ்வாய் வாழ்ந்தாயம்மா
அன்பெனும் சிரிப்புதனில்
பழமாய் அணைத்தாயம்மா
அழகான அம்மா நாகம்மா
எங்கே சென்றாயம்மா
இனி ஒருவர் பிறப்பாரோ
- இவ்வுலகில்
பூவுலகம் சென்ற உங்களை
பொற்பாதம் போற்றியே நினைவு கூர்வோம்.

எழுதுமட்டுவாளைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா குலசேரம்பிள்ளை அவர்களின் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்தியமும் இன்று (29.01.2021) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் சமூகம் தந்தும், தொலைபேசி மூலமாகவும் மலர்வளையம் செலுத்தியும் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் நினைவு மலருக்கு ஆக்கங்களை வழங்கியவர்களுக்கும் எமது நன்றிகளை தெரிவிக்கின்றோம்.

**பழமுதிர்சோலை,**
**எழுதுமட்டுவாள் தெற்கு, எழுதுமட்டுவாள்.**

**குடும்பத்தினர்**
**077 651 0198, 077 255 7969**

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

மலர்வு 10 • 08 • 1944



உதிர்வு 30 • 12 • 2020

கடந்த 30.12.2020 அன்று இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

### அமரர் இராசலட்சுமி தளையசிங்கம்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நேற்று முன்தினம் (27.01.2021) புதன்கிழமை மண்கும்பான் சாட்டி வெள்ளைக் கடற்கரையில் நடைபெற்றது என்பதை அறியத் தருவதுடன் அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (29.01.2021) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**23/6, புதிய செங்குந்தா வீதி,**
**திருநெல்வேலி கிழக்கு,**
**திருநெல்வேலி.**

**குடும்பத்தினர்**

# ஊர்காவற்றுறை பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)
## பதவி வெற்றிடம்

மேற்படி சங்கத்தில் கீழ்வரும் பதவிகளுக்குத் தகுதியுள்ள விண்ணப்பதாரரிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி** :- **பொது முகாமையாளர்**
**சம்பளக் குறி இல** :- 101/08
**சம்பள அளவுத்திட்டம்** :- 18425 - 230*10 - 250*10 - 23225
**தகைமைகள் :-**

01. கூட்டுறவுப் பணியாளர் 09 ஆவது சம்பளத்திட்ட முகாமை அல்லது மேற்பார்வை மட்டப் பதவியொன்றில் மூன்று (03) வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 10 ஆவது சம்பளதிட்ட முகாமை அல்லது மேற்பார்வை மட்டப் பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது.

02. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டம் ஒன்றுடன் அல்லது அதற்குச் சமனான தகைமை ஒன்றுடன் அல்லது அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமை மட்ட பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

03. கூட்டுறவுப் பணியாளர் (உயர்தரம்) பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனமொன்றில் நான்கு (04) வருடகால அனுபவம் அல்லது க.பொ.த உயர்தர பரீட்சையில் மூன்று (03) பாடங்களுக்கான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது ஆறு (06) வருடங்களுக்குக் குறையாத் அனுபவம்.

**பதவி** :- **கணக்காளர்**
**சம்பளக் குறி இல** :- 104/10
**சம்பள அளவுத் திட்டம்** :- 17605 - 198*10 - 220*10 - 21785
**தகைமைகள் :-**

01. கூட்டுறவு பணியாளர் 11 ஆவது சம்பளத்திட்டகணக்கு பதவியலாளர் அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்மந்தமான எழுதுவினைஞர் பதவி ஒன்றில் மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு பணியாளர் 12 ஆவது சம்பளத் திட்ட கணக்கு பதிவியலாளர் அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

02. ஐக்கிய இராச்சிய கணக்கு பதவியலாளர் நிறுவன இறுதியாண்டு பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றின் கணக்கு அல்லது கணக்கு பரிசோதனை அலுவல் கள் சம்மந்தமான மேற்பார்வை மட்ட பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுப வம் அல்லது ஐக்கிய இராச்சிய கணக்கு பதிவியலாளர் நிறுவன இடைநிலைப் பரீட்சையுடன் அங்கீ கரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றின் கணக்கு அல்லது கணக்கு பரி சோதனை அலுவல்கள் சம்மந்தமான மேற்பார்வை மட்டபதவி ஒன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

03. கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரசித்தி அல்லது கூட்டுறவுத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி அத்துடன் கூட்டுறவு நிறுவனமொன்றில் இரண்டு (02) ஆண்டு கால அனுபவம் அல்லது க.பொ.த உயர்தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உள்ளிட்ட மூன்று (03) பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல் அல்லது கணக்காய்வுத் துறையில் ஆக குறைந்தது நான்கு (04) ஆண்டுகால அனுபவம்.

**பதவி** :- **களஞ்சிய மேற்பார்வையாளர்**
**சம்பளக் குறி இல** :- 207/13
**சம்பள அளவுத் திட்டம்** :- 16365 - 140*10 - 150*10 - 19265
**தகைமைகள் :-**

01. கூட்டுறவுப் பணியாளர் 14 ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்ட பதவியொன்றில் இரண்டு வருடங் களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 15 ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்டதுறைப் பதவியொன்றில் நான்கு வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

02. கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணதரம்) சான்றிதழ் அல்லது கா.பொ.த (சாதாரணதரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியும் தொடர்புபட்டதுறைப் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம்

**பதவி** :- **களஞ்சிய முகாமையாளர்**
**சம்பளக் குறி இல** :- 208/14
**சம்பள அளவுத் திட்டம்** :- 15960- 135*10 - 145*10 - 18760
**தகைமைகள் :-**

01. கூட்டுறவுப் பணியாளர் 15 ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்டதுறைப் பதவியொன்றில் இரண்டு வருடங்களுக்குக் குறையாத அனுபவம். அல்லது கூட்டுறவு பணியாளர் 16 ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்டதுறைப் பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

02. கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணதரம்) சான்றிதழ் அல்லது கா.பொ.த (சாதாரணதரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு (06) பாடங்களில் சித்தி.

**பதவி** :- **விற்பனை உதவியாளர்**
**சம்பளக் குறி இல** :- 308/17
**சம்பள அளவுத் திட்டம்** :- 14725-115*10-130*10-17175
**தகைமைகள் :-**

01. கூட்டுறவுப் பணியாளர்கனிஷ்ட தரச் சான்றிதழ்.

அல்லது

02. 08 ஆம் வகுப்புச் சித்தியுடன் விற்பனை அலுவல்களுடன் தொடர்புடையதாக மூன்று வருட (03) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**பதவி** :- **காரியாலய சேவகர்**
**சம்பளக் குறி இல** :- 307/16
**சம்பள அளவுத் திட்டம்** :- 15135- 120*10 - 135*10 - 17685
**தகைமைகள் :-**

1. கூட்டுறவு பணியாளர் 17ஆவது சம்பளத்திட்ட பதவியொன்றில் ஒரு (01) வருடத்திற்கு குறையாத அனுபவத்துடன் 05ம் வகுப்புச் சான்றிதழ்.

அல்லது

2. 08 ம் வகுப்புச் சான்றிதழ்

**ஏனைய விவரங்கள்:-**

- மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு தகைமையுடையவர்கள், விண்ணப்பப் படிவத்தினை தலைமை அலுவலகத்தில் பெற்றுப் பூரணப்படுத்தி கடித உறையின் இடதுபக்க மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு **"தலைவர் ஊர்காவற்றுறை பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், ஆஸ்பத்திரி வீதி, ஊர்காவற்றுறை."** என்னும் முகவரிக்கு 11.02.2021 ம் திகதிக்கு முன்னர் சமர்பித்தல் வேண்டும்.
- வயது எல்லை 18 – 45 வரை ( தற்போது கூட்டுறவுச் சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை கருத்தில் கொள்ளப்படமாட்டாது.
- தற்போது கூட்டுறவுச் சேவையில் இருப்பவர்கள் மேற்படி பதவிகளுக்காக விண்ணப்பிக்கும் போது தமது விண்ணப்பங்களைசம்பந்தப்பட்டசங்கத்தினூடாகஅனுப்பிவைக்கவேண்டும். இத்தகைய ஊழியர் கள் நேரடியாக விண்ணப்பங்களை அனுப்புதல் விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கும் தெரிவு செய்யப்பட்டபின் வெளிப்படுமிடத்து நியமனத்தை இல்லாதொழிப்பதற்கும் வழிவகுக்கும்.
- நியமனத்திற்கென தெரிவுசெய்யப்படும்போது சங்கத்தினால் கோரப்படும் ரொக்கப்பிணை செலுத்துதல் வேண்டும்.
- இப்பதவிக்குரிய அடிப்படைச் சம்பளத்தைவிட மேலதிகமாகக் கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவின் சுற்று நிருபத்திற்கமைய இதரபடிகளும் காலத்துக்குக் காலம் அங்கீகரிக்கப்படும் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

**தலைவர்.**
**ஊர்காவற்றுறை பனை தென்னைவள**
**அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.(வ-து)**
**ஆஸ்பத்திரிவீதி, ஊர்காவற்றுறை.**

**மாடி வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு**

இல.14. கமிலா லேன் ஜின்னா றோட்.
மானிப்பாய் வீதி. 1 பரப்பு மாடிவீட்டுடன் காணி
விற்பனைக்குண்டு.

**075 991 0060**

## விற்பனைக்கு

அப்பளம் தயாரிப்பதற்கு ஏற்ற உழுந்து மா விற்பனைக்கு உண்டு.

தொ.இல.: **021 222 1451**

## வேலையாள் தேவை

வவுனியாவில் மில் வேலைக்கு கூலியாள்கள் உடன் தேவை.

**077 002 8319**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 18 . 03 . 1942
விண்ணில் 29 . 01 . 2020

### அமரர் யோசப் சிறில்
(Depot Suprintendent, Ceylon Petroleum Corporation)

ஆண்டொன்று ஆனாலும்
ஆறவில்லை எம் துயரம்
வையத்துள் வாழ்வாங்கு வாழ
வழிகாட்டிய எம்
அன்புத் தெய்வமே - அப்பா
காலங்கள் விடைபெறலாம்
காலத்தால் அழியாத எம்
நெஞ்சத்து நினைவலைகள்
நீங்காது எமை விட்டு என்றென்றும்
உதிரும் விழி நீருடன்
உங்கள் ஆன்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அன்பு மனைவி,**
**பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,**
**மருமக்கள், உற்றார், உறவினர்.**

**4 ஆம் குறுக்குத்தெரு,**
**பருத்தித்துறை.**

## மரண அறிவித்தல்



பிறப்பு 16 . 05 . 1934
இறப்பு 23 . 01 . 2021

### விஷ்ணு குமாரசிங்கம்
(A.G.R. Research Station, Nuwara Eliya.
Palaly Training College - Former Lecturer)

சிங்கப்பூரில் பிறந்து சித்தங்கேணி. சுண்டுக்குளியை வதிவிடமாகவும் கொண்ட விஷ்ணு குமாரசிங்கம் கனடா (Montreal) வில் காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான விஷ்ணு - பர்வதபத்தினியின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பையா - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், சிவனேசம் குமாரசிங்கத்தின் அன்புக் கணவரும், விஷ்ணு நல்லமுத்துவின் பெறாமகனும், அஜந்தகுமார் (Australia), கிருஷாந்தகுமார் (Canada), சதீஷ்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான பத்மரேகை, பகவதிப்பிள்ளை மற்றும் தனபால சிங்கம். தேவவதி (சந்திரா). நேத்திரவதி (மலர்) ஆகியோரின் அன்புச் சகோத ரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 30.01.2021 சனிக்கிழமை கனடாவில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**B. தனபாலசிங்கம்**
**(சகோதரன் - சித்தன்கேணி)**
**கா.வரதராசா**
**(மருமகன் சித்தன்கேணி)**

## அரச....

**கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு**

வடக்கு, கிழக்கின் பூர்வ குடிகளான நாம் கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக எமது சுயநிர்ணய உரிமைகளுக்காகப் போராடுகின்றோம். தமிழர்களின் போராட்டங்களுக்குச் செவிசாய்க்காத இலங்கை அரசு, தமிழ் மக்கள்மீது கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருவதை நாம் அனைவரும் அறிவோம்.

போர் நிறைவடைந்து 10 ஆண்டுகளில் வடக்கு, கிழக்கை இராணுவமயமாக்கி வரும் இலங்கை அரசு, தமிழ் மக்களின் கலாசார, பண்பாட்டு அடையாளங்களை அழிப்பதுடன், வடக்கு, கிழக்கு பூர்வீகக் குடிகளான தமிழர்களின் இனப்பரம்பலில் மாற்றத்தை உருவாக்கி அவர்களின் இருப்பை இல்லாது செய்வதற்காக, பல வகைகளிலும் கட்டமைக்கப்பட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

தொல்பொருள் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், வனப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் மகாவலி அபிவிருத்தி அதிகார சபை ஊடாகப் பௌத்தமயமாக்கல் திட்டங்களை இலங்கை அரசு முனைப்போடு நடைமுறைப்படுத்தி வருகின்றது.

வடக்கில் குருந்தூர்மலை ஐயனார் கோயில், குசனார் முருகன் கோயில், வேற்றுச்சேனை சித்தி விநாயகர் கோயில் உட்படப் பல கோயில்களில் தமது பாரம்பரிய, கலாசார, சமய வழிபாட்டிடங்களில் ஈடுபடமுடியாதவாறு கோயில்கள் ஆக்கிரமிப்புச் செய்யப்படுகின்றன. பௌத்த விகாரைகளை நிறுவுவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. வடக்கு, கிழக்கில் உள்ள சுமார் 200க்கும் மேற்பட்ட பாரம்பரிய இந்துக் கோயில்களைக் கையகப்படுத்துவதற்கான முயற்சிகளும் நடக்கின்றன. தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் சிங்களக் குடியேற்றங்களும் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன.

**அடிப்படை உரிமை மீறல்கள்**

மனித உரிமை மீறல்களை வெளிக்கொணரும் ஊடகவியலாளர்கள் மீதும், மனித உரிமை மீறல்களுக்கு எதிராகப் போராட்டங்களை முன்னெடுக்கும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மீதும் அச்சுறுத்தல்கள் பிரயோகிக்கப்படுகின்றன. அவர்கள் தொடர்ந்து கண்காணிக்கப்படும் நிலைமையும் நீடிக்கின்றது. இது பேச்சுரிமை மற்றும் அடிப்படை உரிமை மீறலாகும்.

**அடக்குமுறைக்கு எதிராக திரள்வோம்**

இவற்றுக்கு எதிராக வடக்கு, கிழக்கு சிவில் அமைப்புகளாகிய நாம் பொத்துவில் தொடங்கி பொலிகண்டிவரை எதிர்வரும் 3ஆம்திகதி முதல் 6ஆம் திகதிவரை கவனயீர்ப்புப் போராட்டத்தை நடத்தவுள்ளோம். உரிமைகளை இழந்து நீதி மறுக்கப்பட்ட சமூகமாக வாழும் தமிழ் பேசும் மக்களாகிய எமது அவலக் குரல்கள் சர்வதேசத்தின் மனசாட்சிகளைத் தட்டும் அளவுக்கு வீரியமாக எமது போராட்டத்தை அகிம்சை வழியில் முன்னெடுக்க வேண்டும். இந்தப் போராட்டத்தில் அனைத்து தமிழ் பேசும் மக்களும் இணைந்துகொள்ள வேண்டும் என்று அழைப்பு விடுகின்றோம். இந்தப் போராட்டத்துக்கு வடக்கு, கிழக்கில் உள்ள சிவில் அமைப்புக்கள், பல்சமய ஒன்றியங்கள், அரசியல்கட்சிகள் என அனைவரது ஆதரவையும் கோருகின்றோம் என்று வடக்கு, கிழக்கு சிவில் சமூக அமைப்புக்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-150)

## நெல்லியடியில்...

மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார். கரவெட்டி, வதிரியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான பெர்னாட் கரன் (வயது-41) என்பவரே உயிரிழந்துள்ளார். இந்த விபத்து நெல்லியடி நகரில் மக்கள் வங்கிக்கு அருகில் அதிகாலை 12.30 மணியளவில் நடந்துள்ளது.

அதிக வேகத்துடன் பயணித்த கப் ரக வாகனம் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

கட்டுப்பாட்டை இழந்த கப் ரக வாகனம் இரண்டு முறை தடம்புரண்டு, மிக மோசமாகச் சேதமடைந்தது. அதில் பயணித்த ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மற்றையவர் படுகாயங்களுக்கு உள்ளாகினார்.

உயிரிழந்தவரின் உடல் மந்திகை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இறப்பு விசாரணைகளை கரவெட்டிப் பிரதேச திடீர் இறப்பு விசாரணை அதிகாரி வேலுப்பிள்ளை பாஸ்கரன் மேற்கொண்டார்.

விபத்தில் படுகாயமடைந்தவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவருக்கு அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன. (எ-26)

## கறுப்பு....

சுதந்திர தினம் கொண்டாடப்படவுள்ள நிலையில் எதிர்வரும் 2ஆம் திகதி முதல் 6ஆம் திகதிவரை கறுப்புப்பட்டி அணிந்து அடையாள் உணவு தவிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படும்.

சுதந்திர தினத்தன்று வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் இருந்து எதிர்ப்பு ஊர்வலம் ஆரம்பமாகும். காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் எதிர்ப்பு ஊர்வலம் பழைய பஸ் நிலையத்தைச் சென்றடையும்.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு கல்லடிப் பாலத்தில் இருந்து ஆரம்பமாகும் எதிர்ப்பு ஊர்வலம் காந்தி பூங்காவைச் சென்றடையும்.

இந்தப் போராட்டங்களில் அனைத்துத் தமிழ் மக்களும் இணைந்து கொண்டு வலுச் சேர்க்க வேண்டும் என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சிங்கள தேசத்தின் அடையாளங்களுக்குள் தமிழ்த் தேசத்தின் அடையாளங்களைக் கரைத்து தமிழ்த் தேசத்தின் இருப்பை அழித்து எமது தாயகத்தில் எமது மக்களை சிறுபான்மை இனமாக மாற்றி சிங்கள, பௌத்த பேரினவாதிகளிடம் கையேந்தி வாழும் நிலைகளுக்குள் கொண்டுவரும் செயற்பாடுகளே கடந்த 72 வருடங்களாக திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்றன. மக்கள் தமது நிலங்களையும், மொழி, கலாசாரத்தையும், பொருளாதாரத்தையும் பாதுகாத்துக் கொள்வதற்காகப் போராடவேண்டும் என்றும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இறுதிப் போரில் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் காணாமல் ஆக்கப்பட்டவர்கள், இராணுவத்தாலும் துணை இராணுவக் குழுக்களாலும் கைதுசெய்யப்பட்டும், கடத்தப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு நீதி வழங்க வலியுறுத்தியும், சிறைகளில் நீண்டகாலம் அடைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும், தமிழ்த் தேசத்துக்கு அங்கீகாரம் கிடைக்க வலியுறுத்தியும் இலங்கையின் சுதந்திர தினத்தை அனைவரும் துக்க தினமாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (எ-20,6)

## பச்லெட்...

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளரின் உத்தியோகபூர்வ அறிக்கை கடந்த வாரம் கசிந்திருந்தது. அது நேற்றுமுன்தினம் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அந்த அறிக்கைக்கான பதில் நிலைப்பாட்டை அரசு நேற்றுமுன்தினம் புதன்கிழமை மனித உரிமைகள் சபையில் சமர்ப்பித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. அதில் கூறப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக உத்தியோகப்பூர்வ தகவல்கள் எவையும் வெளியாகவில்லை. (ஒ-இ)

## யாழ்ப்பாணத்தில்...

நோக்குடன் இந்த இடமாற்றங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று கூறப்படுகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் வேலணை பிரதேச செயலர் அ.சோதிநாதனுக்கு கடந்த திங்கட்கிழமை இடமாற்றம் வழங்கப்பட்டிருந்தது. இந்தத் திடீர் இடமாற்றம் தொடர்பில் அரச அதிகாரிகளிடத்தில் குழப்பம் ஏற்பட்டிருந்தது. வவுனியா மாவட்டத்தின் செட்டிக்குளம் பிரதேச செயலர் பிரிவுக்கு அவர் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார். இருப்பினும் அவர் சுகவீன விடுமுறையில் உள்ளமையால் இன்னமும் பொறுப்பு ஏற்கவில்லை.

அதேநேரம், யாழ்ப்பாண மாவட்டச் செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இ.கிருஷ்ணராஜனும், மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார். அவர் உடனடியாக அங்கு சென்று கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

தற்போது, யாழ்ப்பாண மாவட்டத்தின் மேலும் இரண்டு பிரதேச செயலர்கள் இடமாற்றப்படுவார்கள் என்று அரசியல் தரப்பால் அதிகாரிகள் மட்டத்தில் தகவல் கசியவிடப்பட்டுள்ளது அதற்கு ஏற்றாற்போல் ஒரு பிரதேச செயலர் தொடர்பில், பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கு முறைப்பாட்டுக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

திறமையான அதிகாரிகளை யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து இடமாற்றும் நடவடிக்கையால் மாவட்ட நிர்வாகம் பாதிக்கப்படும் நிலைமையே எதிர்காலத்தில் உருவாகும் என்று சமூக ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (ஒ-5)

## மேல்மாகாணத்தில்...

ஏற்றும் நடவடிக்கைகள் இன்று ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகளில் முன்னின்று செயற்படும் சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரம் சுகாதாரப் பணியாளர்கள், ஒரு லட்சத்து 20 ஆயிரம் முப்படையினர், பொலிஸார் ஆகியோருக்கே முதலில் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் மேல் மாகாணத்தில் உள்ள 6 முக்கிய மருத்துவமனைகளில் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

கொழும்பு தேசிய வைத்தியசாலை, கொழும்பு வடக்கு வைத்தியசாலை, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, முல்லேரியா வைத்தியசாலை, தேசிய தொற்று நோயியல் பிரிவு, ஹோமாகம ஆதார வைத்தியசாலை ஆகிய மருத்துவமனைகளிலேயே இந்தத் தடுப்பூசி ஏற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## இலங்கைக்கு...

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து அவை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவால் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டன.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இந்தியப் பிரதமர் மோடியிடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமையத் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்திய விமான சேவைக்குச் சொந்தமான விமானம் மூலம் 5 லட்சம் தடுப்பூசிகள் நேற்றுப் பகல் 11.45 மணிக்கு கொழும்பு பண்டாரநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தன.

விமானத்தில் விசேட குளிரூட்டியில் கொண்டுவரப்பட்ட தடுப்பூசிகளின் மொத்த எடை ஆயிரத்து 323 கிலோ என்றும், இந்தத் தடுப்பூசிகள் விமான நிலையவளாகத்தில் உள்ள குளிரூட்டியில் முற்கட்டமாகக் களஞ்சியப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி செயலக ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவை 2 முதல் 8 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் களஞ்சியப்படுத்தப்படவுள்ளன.

பின்னர் அவை குளிரூட்டப்பட்ட வாகனங்கள் மூலம் 25 மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இங்கிலாந்தின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக உருவாக்கப்பட்ட அஸ்ட்ராஜெனெகா கோவிஷெல்ட் கோவிட் தடுப்பூசி மும்பையில் உள்ள சீரம் நிறுவனத்தால் தயாரிக்கப்படுகின்றது. அவையே தற்போது இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளன. (எ-22)

## மல்லிகை...

ஈழத்து எழுத்துலக வரலாற்றில் மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா கடந்த அறுபது வருடங்களுக்கும் மேலாக தனது எழுத்துக்களால் அரும்பணியாற்றியவர். இலக்கியவாதி, படைப்பாளி, மல்லிகை ஆசிரியராக அவர் ஆற்றிய பணி இலக்கிய உலகு நன்கறிந்தது. இலங்கையில் தமது நூலுக்கு முதன்முதலில் சாகித்திய விருது பெற்ற எழுத்தாளரும் இவரே. இலங்கை தமிழக இலக்கிய உறவுக்கு ஒரு பாலமாகவும் விளங்கியவர் மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா. (த-இ)

## வடக்கில்...

இந்தியாவால் இலங்கைக்கு வழங்கப்பட்ட கொரோனாத் தடுப்பூசிகள், நேற்று நாட்டை வந்தடைந்தன.

இன்று முதல் கொரோனாத் தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், வடக்கில் முதற்கட்டமாக சுகாதாரப் பணியாளர்களுக்கு அவை ஏற்றப்படவுள்ளன.

இது தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்ததாவது-

முன்னுரிமை அடிப்படையில் சுகாதாரப் பணியாளர்களுக்குத் தடுப்பூசி ஏற்றத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்குத் தடுப்பூசிகள் ஏற்றப்படும்.

எதிர்வரும் சனிக்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும், திங்கட்கிழமையும் தடுப்பூசிகள் ஏற்றப்படவுள்ளன. வடக்கு மாகாணத்தில் உள்ள தெரிவு செய்யப்பட்ட மருத்துவமனைகள் ஊடாக இவை வழங்கப்படும். என்றார்.


(எ-26)

## ரஷ்யாவுடன் கொண்டிருந்த

# ஒபாமா காலத்து ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டது

## பைடன் - புடின் தொலைபேசியில் பேச்சு





**வொஷிங்டன், ஜனவரி 29**
**அமெரிக்க அதிபர் பைடன் மற்றும், ரஷ்ய அதிபர் புடின் இருவரும் தொலைபேசியில் உரையாடியுள்ளனர். ஒபாமா காலத்தில் அமெரிக்கா - ரஷ்யா இடையே ஏற்படுத்தப்பட்ட அணுவாயுதக் கட்டுப்பாட்டு ஒப்பந்தத்தை மீண்டும் நடைமுறைப்படுத்த இரு அதிபர்களும் இணங்கியுள்ளனர் என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.**


ஒபாமாவின் ஆட்சிக் காலத்தில் அமெரிக்கா - ரஷ்யா இடையே 'நியூ ஸ்ராட்' என்ற ஒப்பந்தம் கைச்சாத்தானது. இரு நாடுகளுக்கும் இடையிலான போர்க் கப்பல்கள், ஏவுகணைகள், அணுவாயுதங்கள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவது இந்த ஒப்பந்தத்தின் பிரதானமான நோக்கம். ஆனால் ட்ரம்பின் ஆட்சிக்காலத்தில் ரஷ்யா குறித்த ஒப்பந்தங்களை மீறுகின்றது என்று தெரிவித்து அமெரிக்கா ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறியது. இந்த நிலையில் ஒபாமாவின் ஆட்சிக் காலத்தில் துணை அதிபராக இருந்தவரும் தற்போதைய அதிபருமான பைடன், ஒபாமா காலத்து 'நியூ ஸ்ராட்' ஒப்பந்தத்தை மீண்டும் நடை முறைப்படுத்த முன்வந்துள்ளார்.

அதேநேரம், எங்களுக்கு அல்லது எங்கள் நட்பு நாடுகளுக்கு தீங்கு விளைவிக்கும் ரஷ்யாவின் நடவடிக்கைகளுக்கு பதிலளிக்கும் வகையில் அமெரிக்கா தனது தேசிய நலன்களைப் பாதுகாப்பதில் உறுதியாக செயல்படும். நிலைமைக் கேற்ப கொள்கைகளை மாற்றிக்கொள்ளும் என்று பைடன் தெரிவித்தார் என்றும் குறிப்பிடப்படுகின்றது. இந்தப் பேச்சுத் தொடர்பில் ரஷ்ய அதிபரின் இல்லமான கிரெம்ளின், ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவுகளை இயல்பாக்குவதன் மூலம் இரு நாடுகளின் நலன்களையும் உறுதி செய்வது குறித்தும், உலக நாடுகளின் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன் மையை பேணுவதில் இருநாடுகளுக்கும் உள்ள சிறப்பு பொறுப்பு குறித்தும் இருநாட்டு தலைவர்களும் பேசினர்" என்று குறிப்பிட்டுள்ளது. (ம)

## அமைதிமுறைப் போராட்டங்களுக்கு மதிப்பளிக்க வேண்டும்

### டெல்லி போராட்டம் குறித்து ஐ.நா கருத்து

புதுடெல்லி, ஜன. 29
அமைதியான போராட்டங்களுக்கு மதிப்பளிக்க வேண்டியது அவசியம் என ஐக்கிய நாடுகள் சபையின் முக்கியஸ்தர் டுஜாரிக் கருத்துத் தெரிவித்துள்ளார்.
மத்திய அரசின் வேளாண் சட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தியக் குடியரசுத் தினத்தன்று டெல்லியில் விவசாயிகள் போராட்டம் நடத்தினர்.
இந்தப் போராட்டம் கலவரமாக மாறியது.
பேரணியில் பொலிஸார் தடியடி மற்றும் கண்ணீர் புகை குண்டு வீசிய தால்தான் அது கலவரமாக மாறியது என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தக் கலவரத்தில் விவசாயி ஒருவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் உலகமெங்கும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.



இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஐ.நா. பொதுச்செயலாளர் அந்தோனியோ குத்தேரஸின் செய்தித் தொடர்பாளர் ஸ்டீபன் டுஜாரிக் மேலும் தெரிவித்ததாவது:
அமைதியான போராட்டங்களுக்கும் மதிப்பளிக்க வேண்டியது அவசியம். இதுபோன்ற பல நிகழ்வுகளில் நாங்கள் மீண்டும் மீண்டும் இதை வலியுறுத்த வேண்டியவர்களாக இருக்கின்றோம் என்றார். (ம)



அமெரிக்காவின் துணை அதிபரான கமலா ஹரிஸ், கொரோனாப் பெருந்தொற்றுக்கான இரண்டாவது தடுப்பூசியை பொதுவெளியில் பெற்றுக்கொண்டார். தடுப்பூசி தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைக்காக அவர் முதலாவது தடுப்பூசியையும் பொதுவெளியில் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

**கணினி திருத்துநர் தேவை**
யாழ். நகரில் இயங்கும் முன்னணி நிறுவனம் ஒன்றுக்கு கணினி திருத்துநர் (Hardware Technician) பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அனுபவ அடிப்படையில் சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 0762276722

**போட்டிப் பரீட்சை நேரடி வகுப்புக்கள்**
ஆரம்பமாகின்றன
சனி, ஞாயிறு
9.00am-2.00pm வரை
- SLTES
- MSO,S.M
- LLB
- Registar
- Revenue
- Agrain Service
- HNDE Teaching
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதி)
TP-076 688 3394
021 222 3382

**காணி விற்பனைக்கு உண்டு**
யாழ்ப்பாணம் கோண்டாவில் கிழக்கு பழனி ஆண்டவர் கோயில் அருகாமையில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (2 பரப்பாக பிரித்து கொடுக்கப்படும்).
(தரகர் தேவையில்லை)
தொடர்புகளுக்கு :- குரு
077 805 1655
077 596 3845

**NEC**
(1) மணிக்கூட்டு வீதி, யாழ் நகர்.
(2) பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ் நகர்.
**A/L 2021 2022 DAY CLASS**
கலை, வர்த்தகம், கணிதம், உயிரியல் பிரிவுகள்
ஆரம்பம் :- 30.01.2021 சனி 9.00 மணி

**கருத்தரங்கு-2021**
MSO, ADR, SLIRS, LLB, LAW COLLEGE, SM,Agri (MA,RO), HNDE
Feb-06 இல் நடைபெறவுள்ள போட்டிப் பரீட்சைகளுக்கான நேரடி விஷேட கருத்தரங்குகள் ஆரம்பம்.
30.01.2021 சனி காலை 9.00 மணி
(சனி, ஞாயிறு 9.00-2.00 மணி)
வளவாளர்கள்
P.உமாசங்கர் ❊ P.கமல்தாசன்
**நாவலர்** கல்வி நிலையம்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்நகர்
TP: 077 469 6695

**பொருளியற் கல்லூரி**
நாவலர் றோட் - யாழ்ப்பாணம்
இருவழி கற்கைகள்
தரம் 6 முதல் 11
**I.C.T**
Mr.சுதர்ஷன்
BIT, BA (Hons) PGDE, HNDIT
நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்
புதிய வகுப்புகள் ஆரம்பம்
31.01.2021 ஞாயிற்றுக்கிழமை
பிரிவு I நேரடி வகுப்பு,
பிரிவு II Zoom Classes
மாலை, இரவு வகுப்புக்கள்
மேலதிக தொடர்புகளுக்கு:
077 376 3511
Note: எனது வகுப்பு A/L 2021, 2022 சனி, ஞாயிறு வழமைபோல் நடைபெறும்.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.01.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.